# பாதுகாவலன்

PATHUKAVALAN

## சிறுகதை

பத்திரிகைக்கு சிறுகதைகளை எழுதி அனுப்புங்கள். தரம் கண்டு பிரசுரிப்போம். படிப்பினை ஊட்டுபவையாக, சிந்தனையைத் தூண்டுபவையாக, சமூக சீர்கேடுகளைப் படம் பிடித்துக்காட்டுபவையாக, அல்லது, புரட்சிக் கருத்துக்களைக் கொண்டவையாக அமையலாம். பிரசுரிக்கப்படாதவை திருப்பி அனுப்பப்பட மாட்டா. பிரசுரிககப்படும் கதைகளுக்கு நன்கொடையாக ரூபா 25/= வழங்கப்படும்.

மலர் 114 இதழ் 7 29-4-1988 (ஏப்ரல்29-மே6) பிரதி ரூபா 1-00 இலங்கையின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

### இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கு, யாழ். ஆயர், இந்தியத்தூதர் மூலம் அனுப்பிய கடிதம்.

# தமிழை உத்தியோக மொழியாக்க சட்டம் கொண்டுவரச் செய்யுங்கள்

**இலங்கை-இந்திய உடன்படிக்கை கைச்சாத்தான பின் அதிலுள்ள விதிகளை, சட்டத்தின் மூலம் நாடாளுமன்றம் அமுல் நடத்தும் என்று அறிவித்துள்ள போதிலும், இதுவரை தமிழை உத்தியோக மொழியாக்க சட்டம் கொண்டுவரப்படவில்லை'' என யாழ். ஆயர் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்குச் சுட்டிக்காட்டியுள்ளார். ஆங்கிலம் இணைப்பு மொழி என்ற திருத்தத்திற்கான விளக்கத்தையும் இந்தியப் பிரதமரிடம் யாழ். ஆயர் கோரியுள்ளார்.**

இலங்கை-இந்திய ஒப்பந்தத்துக்கு இணங்கித் தமிழை உத்தியோகமொழியாக்கும் ஒப்பந்த விதியை அமுல் நடத்துவதற்குத் தேவையான சட்டத்தை இலங்கை நாடாளுமன்றம் நிறைவேற்றவில்லை — ஆனல் தமிழும் உத்தியோக மொழி என்பது வெறும் கடதாசியில் மட்டுமே உள்ளது.

யாழ். ஆயர் பேரருள்திரு வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்கள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியிருக்கின்றார்.

அதில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் உள்ள இந்தியத்தூதர் திரு.ஜே.என்.டிக்ஸிற் ஊடாக அனுப்பப்பட்டுள்ள இக் கடிதத்தில் கூறப்பட்டு இருப்பதாவது.

இலங்கை அரசமைப்பில் செய்யப்பட்ட 13 ஆவது திருத்தத்தின் அத்தியாயம் இரண்டு பிரிவு (பி) [4] ஐ உங்களுக்குச் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

'இந்த அத்தியாயத்தில் உள்ள விதிகளை சட்டத்தின் மூலம் நாடாளு மன்றம் அமுல் நடத்தும்' —

இது வரை தமிழை உத்தியோக மொழியாக்கும் ஒப்பந்த விதியை அமுல் நடத்துவதற்குத் தேவையான சட்டத்தை நாடாளுமன்றம் நிறைவேற்றவில்லை.

அதனுல் தமிழும் உத்தியோக மொழி என்பது வெறும் கடதாசியில் மட்டுமே உள்ளது.

29-7-1987இல் கைச்சாத்தான இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் ஷரத்து 2, 18 இன்படி இலங்கையின் உத்தியோக மொழிகளாகத் தமிழும் ஆங்கிலமும் பிரகடனப்படுத்தப் படவேண்டும்.

இலங்கை அரசமைப்புக்குச் செய்யப்பட்ட 13 ஆவது திருத்தம் சென்ற நவம்பர் 14ஆம் திகதி உறுதிப்படுத்தப் பட்டது.

அதன்படி தமிழ் உத்தியோக மொழி ஆக்கப்பட்டது. ஆனல் ஆங்கிலம் இணைப்பு மொழியாக்கப்பட்டது. இது ஒப்பந்தத்தின் ஷரத்து 2, 18க்கு முரணனது.

சிறுபான்மைச் சமூகங்களைச் சேர்ந்த பிரசைகளுக்கு என்ன உரிமைகளை 'இணைப்பு' மொழி வழங்குகிறது என்பது எவருக்கும் தெரியாதது போலத் தோன்றுகிறது.

உங்களுக்கு இந்த நிலைமை தெரிந்திருக்கும் என்று ஊகிக்கின்றேன்.

இந்த ஒப்பந்த மீறல் இலங்கையின் சிறுபான்மைச் சமூகங்களை பாரதூரமாகப் பாதிக்கிறது, இந்த மீறலைத் திருத்த நீங்கள் என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளீர்கள் என்பதை அறியவிரும்புகின்றேன்.

ஆகவே கீழ்வரும் கோரிக்கைகள் குறித்து உடனடி நடவடிக்கை எடுக்கும்படி தங்களை வேண்டுகின்றேன்.

★ ஆங்கிலம் சம்பந்தப்பட்ட ஒப்பந்த மீறலை நிறுத்துங்கள்.

★ தமிழும் ஆங்கிலமும் உத்தியோக மொழிகளாக அமுலாக்கத் தேவையான சட்ட மூலத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற ஆவன செய்யுங்கள்.

இப்படி கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உலக சமாதானத்துக்கு மத சுதந்திரம்

புது டெல்லி, 1988ஆம் ஆண்டு சமாதானத் தினத்திற்குரிய கருத்து அமைதியுள்ள சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதற்கு அடிப்படையான சமாதானமாகும். இத்தினம் மகாத்மா காந்தி இறந்த தினமான சனவரி 30ஆம் திகதியன்று நினைவு கூரப்பட்டது.

இத்தினத்திற்கான செய்தியில் பேராயர் அஞ்சலோ பெர்னுண்டஸ் சமாதானத்துக்கும் மத சுதந்திரத்துக்கும் நெருங்கிய தொடர்புண்டெனக் குறிப்பிட்டுள்ளார்.

''அடிப்படை மனித உரிமையான சமயச் சுதந்திரத்தை நசுக்கினுல் அது மக்களிடம் எதிரிடையான ஒரு தாக்கத்தை ஏற்படுத்திச் சமாதானத்துக்குத் தேவையான சக்தியை உறிஞ்சி விடுகிறது. இலௌகிக ரீதியான எமது நாட்டில் அரசியலமைப்பே சகலரது மதத்துக்கும், சமய நம்பிக்கைகளுக்கும் மதிப்பளித்து, மனித அபிவிருத்திக்காக ஒன்றுபட்டுழைக்கும் குடிமக்களின் நல்லெண்ணத்திற்கும், சகிப்புத் தன்மைக்கும் உறுதியான அடித்தளமாக இருக்கின்றது.

வகுப்பு வாதமும், பெரும் வறுமையும் இரு முக்கிய பிரச்சினைகளாக இருந்து வருகின்றன. ஆகவே தமது சேவையைச் சகல சமூகத்தினருக்கும் அளிக்கும் சமயக் குழுக்கள் திட்டமிட்டுச் செயலாற்ற வேண்டும். சமாதானத்துக்காகச் செபிப்பதற்கு பன்மதக் குழுக்கள் கூடுவது கூடியளவு ஊக்குவிக்கப்பட வேண்டும்'' என்று பேராயர் பெர்னுண்டஸ் கூறியுள்ளார்.

### வாழ்க! வாழ்க! நீடு வாழ்க!

ஆயர்

திருநிலைப் படுத்தலின்

ஐந்தாவது

ஆண்டு நிறைவு

**7-5-1988**



பேரருள்திரு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை
திருமலை — மட்டுநகர் ஆயர்

## பிதா சவாராவுக்கு முத்திரை

இந்திய ஜனுதிபதி திரு. வெங்கட்டராமன் திருவனந்தபுரத்தில் முத்திப்பேறுபெற்ற பிதா குரியாகோஸ் எலியாஸ் சவாராவுக்கு முத்திரை யொன்றை வெளியிட்டார். திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர் 1986இல் இந்தியாவுக்கு வருகை தந்தபோது பிதா சவாராவுக்கு முத்திப்பேறு பெற்றபட்டத்தை அளித்தார்.

இவ்வைபவத்தில் உரையாற்றிய திரு. வெங்கட்டராமன் பிதா சவாராவும் கிறிஸ்தவர்களும் ஆற்றிய பணிகளைப் பாராட்டிப் பேசினுர். ''நாடு அந்நியராட்சியின் இருளில் இருந்த 19ஆம் நூற்றுண்டில் பிதா சவாரா வேதங்கள் உபநிஷதங்களைக் கற்று அவற்றிலுள்ள ஞானத்தைச் சமூக அபிவிருத்திக்குப் பயன்படுத்தினுர். சமயமும் கல்வியும் அவருக்கு ஒரு நாணயத்தின் இரு பக்கங்களாக இருந்தன. அவரைப் போல் இறை தியானத்தையும், சமூகப் பணியையும் இயல்பாகவும் பயன்படத்தக்கதாகவும் இணைக்கக் கூடியவர்கள் வெகுசிலரே''எனக் குறிப்பிட்ட ஜனுதிபதி நாட்டின் அபிவிருத்திக்குக் கிறிஸ்தவர்கள் ஆற்றிய பணியைப் பெரிதும் புகழ்ந்தார்.

பிதா சவாரா ஆண்களுக்கும் பெண்களுக்குமாக இரு துறவற சபைகளை இந்தியாவில் நிறுவியவர்.

(தொடர்ச்சி 8ஆம் பக்கம்)

### பண்டத்தரிப்பு பத்திமா பதியில்
## தேவதாயின் திருக்காட்சி விழா

மரியாயின் ஆண்டாகிய இவ்வாண்டில், மரியன்னையின் பிள்ளைகளாகிய நாம் அனைவரும் மிகவும் பலன் அடையக் கூடிய முறையில், தேவதாயின் திருக்காட்சி விழா பண்டத்தரிப்பு பத்திமா பதியில் மிகவும் சிறப்பாக இம் முறை கொண்டாடப்படும்.

**நவநாட்கள்**

வைகாசித்திங்கள் 4ஆம்நாள் தொடக்கம் 12ஆம்நாள் வரை நடைபெறும்.

**இந்நாட்களில் தினமும்**

மாலை 5.00 மணிக்கு செபமாலையும், திருப்பலியில் மறை உரையும் நடைபெறும்.

**13ம் திகதி காலை 7.00 மணிக்கு திருநாட் திருப்பலி இடம் பெறும்.**

மரியன்னையின் மூலம் இறைவன் தரும் அருள் வளங்களைப் பெற்று, மன நிறைவுடன் வாழ மரியன்னையின் பிள்ளைகள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறேம்.

பங்குத் தந்தை,
பத்திமா மாதா ஆலயம்.

## கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண்

# நீலக் கொடி

நித்திரையின்றி, சிந்தனையுடன் தவித்துக்கொண்டிருந்தன இரு உள்ளங்கள். தாங்கள் எதிர்பார்ப்பது மறுநாள் நடக்குமோ, நடக்காதோ என்ற ஏக்கம் அவர்கட்கு,

‘‘இஞ்சருங்கோ தேநீர் போட்டுக் குடிப்போமோ?’’ மனைவியின் குரல். கணவன் சுவர்க்கடிகாரத்தைப் பார்க்கின்றார் அதிகாலை ஒரு மணி. பொழுது கெதியில்விடியாதா? என்ற அங்கலாய்ப்புடன் ‘இந்நேரம் நேநீர் எதற்கு, பேசாமல் படும்’’ என்றார்.

முதல் நாள் கிடைத்த தபாலை மீண்டும் ஒருமுறை வாசித்துப் பார்ப்போமோ, கணவரிடம் கேட்டால் என்ன சொல்வாரோ என்ற அச்சம் ஒருபுறம், ஏன் அவரும் சற்று நேரத்திற்கு முன்னதாக தனது தலையணையின்கீழ் வைத்திருந்த தபாலை, அவளை நோட்டம் விட்டபடியே அவசரம் அவசரமாகப் பார்த்தாரே, அவள் துயில் கொள்வது போல் பாசாங்குசெய்து அரைக்கண்ணால் கவனித்தாளே தானும் கேட்டுப் பார்ப்போம், அச்சம் நீங்கித் துணிவு மேலிட, ‘இஞ்சருங்கோ தபாலை ஒரு முறை வாசிக்கத் தாங்கோ’’ என்று ஆவல் ததும்பக் கேட்டாள்.

‘‘தபால் கிடைத்ததிலிருந்து எத்தனை தடவைகள் வாசித்தீர். மீண்டும் எதற்கு?’’ என, யோசவ் மனைவியைக் கேட்டாலும், வாசிக்கக் கொடுத்தால் தானும் இன்னொரு தடவை பார்க்க வாய்ப்புக் கிடைக்கும் என்ற சுய நோக்குடன், கடிதத்தைவாசிக்கக் கொடுக்கின்றார். மனைவி வாசித்துவிட்டு யோசப்பைப் பார்த்து ‘‘உண்மையில் மகனின் எழுத்துக்களா?’’ யோசப்‘‘ இதில் என்ன சந்தேகம். மகனின் எழுத்துக்களேதான்’’

யோசப் படிப்பறிவுள்ளவர். ஊருக்குப் பெரிய மனிதர் என்ற மதிப்புப் பெற்றவர், செல்வாக்கும், சொல்வாக்கும் நிறையப்பெற்றவர். தன் சேவையால் கிராம மக்களின் நெஞ்சத்தில் குடிகொண்டவர். தன் கொடைத்தன்மையால் பலருடைய நெஞ்சைக் கொள்ளைகொண்டவர். மனைவி மேரியோ தன் நற்பண்புகளால் கணவனின் மட்டுமல்ல கிராமத்தோரின் நன்மதிப்புகளையும் பெற்றவர்.

ரவி இவர்களது ஏக புதல்வன். செல்லமாக வளர்க்கப்பட்டவன். கல்வியில் ஊக்கமில்லாத மந்தநிலை. கல்வியில் ஊக்குவிப்பதற்கு பாடசாலை முடிந்தவுடன், தனியார் கல்விநிலையங்கட்கும் அனுப்பிவைத்தனர் பெற்றோர்.

செல்வந்தக் குடும்பத்துப் பிள்ளையல்லவா? நண்பர்கள் பலரின் நட்பு ரவிக்குக் கிடைத்தன. தனியார் கல்வி நிலையங்கட்குச் செல்வதை வாய்ப்பாக பயன்படுத்தி நண்பர்களுடன் மினிசினிமாக் கொட்டகைகளுக்குச் சென்றான்.

தீயபண்புகளைக் கொண்ட நண்பர்களின் சகவாசம் கூடியது. புகைத்தல், மது அருந்துதல், சூதாட்டம் ஆகியவையும் இவனுக்குக் கைதேர்ந்த கலைகளாகின, இவற்றிற்குப் பணம் தேவைப்படும்போது வீட்டில் பெற்றோருக்குத் தெரியாமல் திருடவும் தொடங்கினான்.

பெற்றோர்கள் இதனை அறிய வரவே, அன்பினால் மகனைத் திருத்த முயற்சித்தும் பலனில்லை. எனவே கண்டிக்கத் தொடங்கினர். கண்டிப்பும் தண்டனையும் அதிகரிக்க வீட்டை விட்டு வெளியேறினான் ரவி.

## சிறுகதை

பெற்றோர்களின் பாசவுணர்வலைகட்கு பெரும் தாக்கம்; மகன் திருந்தி வருவான். மரியன்னை எங்களைக் கைவிடமாட்டாள் என்ற நிறைவான நம்பிக்கையுடன் இருந்தார்கள்.

ரவி, நண்பர்களோடு கூடி அயற் கிராமங்களில் பல திருட்டுக்களைச் செய்தான். ஓர் நள்ளிரவில் ரவி கோஷ்டி கடையுடைப்பு முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவேளையில், வீதி ரோந்துவந்த நகர பாதுகாவலர்களிடம் அகப்பட்டார்கள். பல கொள்ளைகளின் சூத்திரதாரிகள் ரவி கோஷ்டி என நகர பாதுகாவலர்கள் தமது புலன் விசாரணைமூலம் தெரிந்துகொண்டனர்.

நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. தாங்கள் சுத்தவாளிகள் எனக்கூறிய போதிலும் தகுந்த சாட்சியங்கள் மூலம் குற்றவாளிகள் என நிரூபிக்கப்பட்டு மூன்று வருட கடூழியச் சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது.

— வ அ. இம்மானுவேல்

பெற்றோர்கள் அறிந்தும் கவலைகொள்ளவில்லை. ரவி எத்தனை ஏழைக் குடும்பங்களைக் கலங்கவைத்தவன். அதற்குரிய தண்டனையை அனுபவித்தே ஆகவேண்டும். சிறைவாசத்தின்பின் ரவி திருந்திவருவான், என்றதளராதநம்பிக்கையுடன் மரியன்னையிடம் தினமும் மன்றாடி வந்தார்கள். சிறையில் ரவி இரவு வேளையில் இரு தீக்குச்சிகளை திருச்சிலுவை வடிவில் அமைத்து இறைவனை மன்றாடினான். தான் செய்த பாதகச் செயல்களை நினைத்துக் கலங்கினான். தன்னால் பாதிப்படைந்த குடும்பங்களை எண்ணி மனம் வருந்தினான்.

பெற்றோரினதும் மன்றாட்டு வீண்போகவில்லை. சிறைவாசத்தின்போது இவனில் ஏற்பட்ட மனமாற்றம், நல்நடத்தை சிறைச்சாலை சீர்திருத்த அதிகாரிகளால் அவதானிக்கப்பட்டது. சீர்திருத்த அதிகாரிகள் ரவியின் சிறைத் தண்டனைக் காலத்தை குறைக்கும்படி மேலதிகாரிகட்கு சிபார்சு செய்தனர்.

சிறைத்தண்டனைக் காலம் குறைக்கப்பட்டது. விடுதலையாகும் நாளும் அறிவிக்கப்பட்டது.

தான் விடுதலையாவதற்குஇரு தினங்களுக்குமுன் இச்செய்தியைக் கடிதம் மூலம் அறிவித்தான். அம்மா, அப்பா நான் இன்ன நாளைக்கு விடுதலையாகி வருகிறேன், நீங்கள் என்னை ஏற்றுக்கொள்வீர்களோ தெரியாது? ஏற்பீர்களானால் நான் விடுதலையாகும் நாளன்று வீட்டு வெளி வாசலில் நீலக் கொடி ஒன்றை உயரப்பறக்கக் கூடியதாக கட்டிவிடுங்கள் கொடி கட்டப்பட்டிருந்தால் வீட்டிற்கு வருவேன். இல்லாவிடில் எங்காவது அனாதை இல்லத்தில் சேர்ந்து, தொண்டு செய்ய முனைவேன்.

விடுதலையாகும் தினம் வந்தது. ரவியின் உள்ளத்தில் பூரிப்பு. மலர்ந்த முகம். அத்தோடு பெற்றோர் என்னை மீண்டும் ஏற்பார்களா என்ற கலக்கம். ரவி விடுதலை செய்யப்பட்டான். சிறைச்சாலையிலிருந்து புறப்படும்பொழுது சிறைச்சாலை ஊழியர்கள் அதிகாரிகளின் கண்கள் கலங்கின. ரவி தன் நல்நடத்தை நற்செயல்களால் அவர்கள் உள்ளத்தில் நீங்காத இடத்தைப் பெற்றுவிட்டான்.

வீடு நோக்கிப் பேருந்து வாகனத்தில் வந்தான். வீட்டிற்குச் சற்றுத் தொலைவில் வரும்பொழுது, கொடி கட்டப்பட்டிருக்கிறதா என ஆவலோடு பார்த்தான். கொடி கட்டப்படவில்லை. அவன் எண்ணங்கள்சிதறுண்டன,அதிர்ச்சி, ஏமாற்றம். தன்னையும் அறியாமல் அழுதே விட்டான்.

வீடு முன்பாக பேருந்து வண்டி நின்றபோது அவன் தன் கண்களையே நம்பவில்லை. தான் காண்பது கனவா?என்ற எண்ணம். மெய்சிலிர்த்தது. கண்கள் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தன. வாகனத்தில் இருந்து அவசரமாகப் பாய்ந்தான்.

வீட்டு முற்றத்தில் தன் தந்தை கலங்கிய கண்களுடன், நடுங்கிய கரங்களில் பெரியதொரு நீலக்கொடியை தாங்கிய வண்ணம் நின்றார். பார்த்தவிடமெல்லாம் நீலக் கொடிகள். வீட்டுக் கூரை, செடி கொடிகள், மரங்கள், செத்தைகள் எல்லாம் நீலக் கொடிகள்

ஓடிச்சென்று தந்தையின் பாதங்களில் வீழ்ந்து ‘‘அப்பா உங்கள் துஷ்ட மகன் செய்த கொடுமைகளையெல்லாம் மறந்துஎன்னை ஏற்றுவிட்டீர்களே. இனி நான் நல்ல பிள்ளையாய் இருப்பேன்’’ என்று கத்தினான் தந்தையோ பாச உணர்ச்சிவசத்தால் கண்ணீரைக்கொட்ட கண்கள்தயாராகிக்கொண்டிருந்தாலும் மிகுந்த பிரயத்தனப்பட்டு அடக்கிக்கொண்டிருந்தார். பாதங்களைக் கட்டிப்பிடித்து கதறிகொண்டிருந்த மகனை நடுங்கிய கரங்களால் தூக்கி அரவணைத்துக்கொண்டு வீட்டினுள்ளே சென்றார்.

தாய் நீலநிற ஆடை அணிந்து, நீலநிற மலர்களால் அலங்கரிக்கப்பட்டிருந்த மேசையில் வைக்கப்பட்டிருந்த மரியன்னையின் சுருபத்திற்கு முன்னால் கூப்பிய கரங்களோடும், மூடிய கண்களோடும், தியானித்துக் கொண்டிருந்தாள்.

தாயின் மடிமேல் விழுந்து ‘‘அம்மா என்னை மன்னிப்பீர்களா? நான் முன்னைய ரவியில்லையம்மா. புது ரவியம்மா மன்னித்துவிட்டேன் என ஒரு வார்த்தை சொல்லுங்கம்மா’’ எனக்கதறினான்.

‘‘மகனே நாங்கள் உன்னை மன்னிக்க வேண்டியதில்லை. என்றும் நீ எங்கள் மகன்தானப்பா, எத்தனையோ ஏழைகளை நீ கண்ணீர் சிந்த வைத்தாயப்பா; அவர்களிடம் நீ முதலில் மன்னிப்புக் கேட்க வேண்டுமையா, அப்பாவும், நானும் நீ வீட்டை விட்டு வெளியேறிய நாள் தொடக்கம் ஒரு நேர உணவு தான் மகனே உட்கொண்டோம். உனக்காகப் பல ஆயிரம்ரூபாய்களை சேமித்து வைத்திருக்கின்றோம். இப்பணத்தினை நீ திருடிய வீடுகட்குஎடுத்துச்சென்று ஒப்படைத்து முதலில் அவர்களிடம் மன்னிப்புக் கேளப்பா. அவர்கள் விடும் ஆனந்தக் கண்ணீர்தான் எமது மகிழ்ச்சி’’ எனக் கூறித் தனது மடியில் கிடந்து கதறும் மகனை அரவணைத்து உச்சிமுதல் உள்ளங்கால்வரை பாசஉணர்வுகளுடன் முத்தம் சொரிந்தாள்

# தேனருவி

## பாஸ்கா 6ஆம் ஞாயிறு (08-05-88)

## தெய்வீக அன்பு - அது என்ன?

அப். பணி. 10: 25, 34, 48. 1 அரு. 4: 7-10, அரு. 15: 9–17

அன்றொரு நாள், பிரபல்யமான சட்ட வல்லுனர் ஒருவரிடம், யூத மதத்தை அறியாத அந்நிய இனத்தவர் ஒருவர் வந்தாராம். அவர் வந்து வேண்டுகோள் ஒன்றை விடுத்தாராம். அதுஎன்னவென்றால், அந்த அந்நியர் ஒற்றைக் காலில் நின்று ஓயும் நேரத்திற்குள் பஞ்சாகமம்,(வேதாகமத்தின் முதல் ஐந்து நூல்கள்) முழுவதையும் கற்றுக்கொடுக்க வேண்டும் என்பதே. அப்போது அச்சட்ட வல்லுனர் ‘‘உனக்குச் செய்யப்படவிருப்பமில்லாதது எதையும் அடுத்தவருக்குக்குச் செய்யாதே. புத்தகத்தின் ஏனைய வாக்கியங்கள் யாவும் இதன் விளக்கமே’’ என்று கூறி மாணவனை அனுப்பிவிட்டாராம். அதிசிறந்த ஆசிரியரான இயேசுவும் இறைவாக்கு முழுவதையும் உருட்டித் திரட்டி ஒரேயொரு கட்டளையில் வடித்துவிடுகிறார் ‘‘ஒருவர் ஒருவரிடம் அன்புகூர வேண்டும்’’ என்பதே அவரது கட்டளை. இன்று அன்பில் பலர் நம்பிக்கை இழந்துபோய்விட்டார்கள். காரணம் என்னவென்றால், அவர்களது கடந்த கால அனுபவத்தில்அன்பு என்ற போர்வையில் அவர்கள்அனுபவித்த துர்ப்பிரயோகங்களே யாகும். தோலிலும், தோற்றத்திலும் எழும் கவர்ச்சி உள்ளத்தை ஊடுருவாவிடில் அன்பு அர்த்தம் இழந்துவிடுகிறது.

அன்பில்பல நிலைகள் உண்டு. ஏழையைக் கண்டு இரங்குவது, இரக்கம்.வெற்றிபெற்றவரைத் தட்டிக்கொடுப்பது ஊக்கம். தவறு இழைப்பவரைச் சுட்டிக் கேட்பது, சவால். இவை போன்று அன்பின் வடிவங்கள் ஏராளம். அனைத்திற்கும் மேலானதும்தெய்வீகமானதும் தியாகமே.

தெய்வத்திடம் அன்புஉண்டு என்று கூறுது, தெய்வம் என்றால் அன்பு என்றும் தெய்வமும் அன்பும் ஒன்றே எனவும் கூறுவதற்கு மிகுந்த காரணம் உண்டு.

தெய்வம் எல்லையின்றி,நிபந்தனை ஏதுமின்றி, நீதியுமின்றிக் கொடுத்துக்கொண்டே இருக்கிறது. தன்னையே கொடுக்கும் அன்புதான் தெய்வீக அன்பு. இயேசுவின் அவதாரத்திற்கும். சிலுவை மரணத்திற்கும் காரணமும், விளக்கமுமே அதுதான். ‘‘அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு’’ என்ற வள்ளுவப் பெருமானின் வாக்கும் இதன் விளக்கமே ‘‘உயிரைக் கொடுப்பதைவிட மேலான அன்பு இல்லை’’ என்று கூறிய இயேசு தம் போதனையைச் சாதனையாக்கியவர்.

சுயநலம் மலிந்த எம் உள்ளங்களில், காணி, பூமி, காசு, என்று அடுத்தவரைச் சுரண்டி அளவுக்கு அதிகமாய் அபகரிக்க ஆசைகொள்ளும்மனித சமூகங்களில் தெய்வீக அன்பு வெறும் கற்பனையாகத் தோன்றலாம். ஆனாலும் இதைத் தவிர்ந்த வேறு வழியே மனிதனுக்கு இல்லை. அறிவால், ஆற்றலால்; பொருளால், பெயரால்; மனிதன் வளரலாம். வளர முயற்சிக்கலாம். ஆனால் தெய்வமன நிலையுடன் கொடுக்க மனமில்லையோ அவன் மனிதனாகவே வாழ முடியாது.

கிறிஸ்தவம் இன்று தேக்க நிலையிலும், அருகிக்கருகியநிலையிலும் கிடக்கக் காரணம் தெய்வீக அன்பு கிறிஸ்தவ குடும்பங்களிலும், குழுக்களிலும் அருகிவிட்டமையே. ‘‘நீங்கள் அல்ல; நான்தான் உங்களைத் தேர்ந்து கொண்டேன்.’’ என்று கூறும் இறைவன் தமது அன்பை இவவசக் கொடையாக எம் உள்ளங்களிற் பொழிந்து, எம்மைத் தம் நண்பர்களாக ஏற்கிறார்.

ஆனால், நாமோ எம் இதயங்களைக் கடினப்படுத்திப் பிரதி அன்பு காட்ட மறுக்கிறோம். ஏனென்றால், அயலவரை நாம் மறக்கிறோம், மறுதலிக்கிறோம். அணு அணுவாய்த் தம்மைக்கொடுக்கும் தெய்வீக அன்பை வீணே உறையவிடாது அணுவளவேனும் அதை அயலவருடன் பகிர விழைவோம். கொடுப்பதே மேலான அன்பு.

—சுவாமி ஜீவா போல்
அ. ம. தி.

வீட்டுக்கொரு பாதுகாவலன் - உங்கள் பங்கில் நடைமுறைப் படுத்துங்கள்

# கிறிஸ்தவ சமயம் க. பொ. த. (உ/த)

வினா 6. ஆபிரகாமிடம் பல குறைகள் காணப்பட்ட போதிலும் இறைவனின் நண்பனுயிருப்பதற்கான தகைமைகளும் அவரிடம் காணப்பட்டன: இக்கூற்றை ஆராய்க (6-5-88)

வினா 7. "இறைவனது தேர்வும் அழைப்பும் மனித நோக்குகளுக்கும் எதிர்பார்ப்புகளுக்கும் அப்பாற்பட்டது; தனித்துவமானது" இக்கூற்றை யாக்கோப்பின் வாழ்வோடு தொடர்புபடுத்தி விளக்குக (13—5—88)

வினா 8. சூசையின் வாழ்வு பூராவும் இறைவனின் பராமரிப்புக்கரம் செயலாற்றுகிறது. உதாரணங்களுடன் விளக்குக. (20—5—88)

வினாவுடன் தரப்பட்டுள்ள திகதிகளுக்கு முன், அவற்றிற்கான விடைகளைப் பாதுகாவலன், அ. பெ. இல 2, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

**நான்காவது வினாவிற்கான பரிசு பெறும் விடை. பரிசு: ரூபா 50-00**

பரிசுபெறுபவர்: வி. மேரி பற்றீசியா C/o விஜயரட்ணம்,
திருக்குடும்பக் கன்னியர்மடம், இறம்பைக்குளம், வவுனியா.

4. மீட்பின் வரலாற்றில் ஈசாக் கொண்டுள்ள பங்கு.

இறைவனின் தலையீட்டினால் ஆபிரகாமுக்கு அவரின் முதிர்ந்தவயதில்அவர்மனைவிசாராள் வழியாகப் பிறந்த மகன் தான் ஈசாக். ஈசாக்வழியாக இறைவன் ஆபிரகாமுக்கு"ஒரு பெரிய இனமாக்குவேன்"என்று கூறிய வாக்குறுதியை நிறைவேற்றுகிறார்

ஈசாக்கின் தந்தையாகிய ஆபிரகாமைஇறைவன்சோதிப்பதற்காக அவர் அன்பு செய்த ஒரே மகனான ஈசாக்கைப் பலியிடும்படி கூறுகின்றார்.

பலியிடப் போகும்போது பலியிடுவதற்குத் தேவையான கட்டைகளை எடுத்து தன் மகன் ஈசாக்கின் தோளின்மீது சுமத்தினார். நெருப்பையும், வாளையும் கையில் எடுத்துக்கொண்டார். இவ்வாறு இருவரும் சேர்ந்துசெல்கையில்,ஈசாக்தன் தந்தையை நோக்கி "இதோ நெருப்பும், கட்டைகளும் இருக்கின்றன. தகனப்பலிக்கு வேண்டிய மிருகம் எங்கே" என்று வினவுகின்றார். அதற்குத் தந்தையாகிய ஆபிரகாம் கூறுகின்றார், "தகனப்பலிக்கு வேண்டிய மிருகத்தைக் கடவுளே தயார் செய்துகொடுப்பார்".பின்பு கடவுள் ஆபிரகாமுக்குக் காட்டியிருந்த இடத்தை அடைந்ததும் அவர்அங்கே ஒரு பீடம் அமைத்து அதன் மேற் கட்டைகளை அடுக்கி வைத்து, பின் தன் மகன் ஈசாக்கைப் பீடத்தில் அடுக்கியிருந்த கட்டைகளின் மேற் கிடத்தி தம் கையை நீட்டி வாளை உருவி அவனைப் பலியிட முயற்சித்தார். அப்போது ஆண்டவருடைய தூதர் அவரைத் தடுக்கின்றார். இச்சம்பவத்திலிருந்து பிதாப்பிதா ஆபிரகாமின் மகனான ஈசாக் தன் தந்தைக்கு எவ்வாறு கீழ்ப்படிகின்றார் என்பது புலனாகின்றது. அத்துடன் தன் தந்தையுடன் சேர்ந்து எவ்வளவு பொறுப்பாக தனக்குக் கொடுத்த பணிகளைச் செய்கிறார் என்பதும் அறியக் கூடியதாக இருக்கின்றது.

ஈசாக்கைப் பற்றி விவிலியத்தில் அதிகம் எழுதப்படவில்லை. ஆயினும் இறைவனால் தெரிந்து கொள்ளப்பட்ட மக்களின் ஒரு கோர்வையாகப் பரிசுத்த வேதாகமத்தில் இடம்பெறுகின்றார். ஈசாக்கைப் பலியிட முயன்ற சம்பவத்தை அடுத்து இன்னும் சிலவற்றைச் சற்று ஆராய்ந்து பார்ப்போம். ஈசாக்கின் திருமணத்தை எடுத்துக் கொண்டோமாகில் அவர் தனது தந்தை தனக்கு திருமணம் முடித்துவைக்கும்வரை பொறுமையோடு காத்திருந்து அந்தத் திருமணத்தை ஏற்றுக் கொள்ளுகின்றார். அத்துடன் தனது மனைவியாகிய இரெபேக்காளை திருமணம் செய்து கொண்டதால், தனது தாயின் மரணத்தினால் அவனுக்கு ஏற்பட்டிருந்த துயரமும், கவலையும் பெரும்பாலும் தணிந்து போயிற்றென்றே கூறலாம். அதனால் தனது மனைவியாகிய இரெபேக்காள்மீது அதிக அன்புகொண்டிருந்தான். அவர்கள் கொண்டிருந்த அன்பின் அடையாளமாக அவர்களுக்கு எசாயூ, யாக்கோபு என்னும் இரட்டைப் பிள்ளைகள் பிறந்தனர். இந்த இரண்டு பிள்ளைகளும் பிறப்பதற்குமுன் ஈசாக்கின் மனைவி பல ஆண்டுகள் மலடியாய் இருந்ததினால் அவர் ஆண்டவரை வேண்டிக் கொண்டார். ஆண்டவரோ ஈசாக்கின் மன்றாட்டைக் கேட்டு, இரெபேக்காளுக்கு மகப்பேறு அளித்தார். அந்த மகப்பேற்றிற் பிறந்தவர்கள் தான் எசாயூ, யாக்கோபு என்னும் இரட்டைப் பிள்ளைகளாவர். ஈசாக்கோ தன் இரண்டு பிள்ளைகளிலும், மூத்தவனான எசாயூவையே அதிகமாக அன்புசெய்தான். ஏனென்றால் எசாயூ வேட்டையாடுவதிலும், பயிர்த்தொழிலிலும் வல்லவனாயிருந்தான். அதனால் அவனுடைய வேட்டை மிருகங்களை விரும்பிச் சாப்பிட்டு வந்தான்.

ஆனால் இரெபேக்காளோ தன் இளைய மகனான யாக்கோபுவையே அதிகமாக அன்பு செய்தாள். இவ்வாறு இவர்கள் வாழ்ந்துவருகையில், நெடுநாட்களாக அந்த நாட்டிலே மழை இல்லாது பஞ்சம் உண்டானது. அதனால் ஈசாக் பிலிஸ்தியர் அரசனான அபிமெலெக்கைக்காண ஜெராரா நாடுசென்றார். அப்போதுஆண்டவர் அவருக்குத் தோன்றி"நீ எகிப்து நாட்டிற்குப் போகாமல் நாம் உமக்குக் காண்பிக்கும் நாட்டிலே குடியிரு. அதிலே நீ அந்நியனாய் குடியிருப்பாய். நாம் உனக்குத் துணையாய் இருப்போம். உன்னை ஆசீர்வதிப்போம். உன் தந்தையாகிய ஆபிரகாமுக்கு நாம் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றி, அந்த நாடு முழுவதையும், உனக்கும் உன் சந்ததிக்கும் தருவோம். உன் சந்ததியைவிண்மீன்களைப் போற் பெருகச் செய்வோம். பூமியிலுள்ள எல்லா இனத்தாரும் உன் சந்ததியில் ஆசீர்வதிக்கப்படுவர்". என்று கூறினார், (ஆதி. 26: 24-25)

அவ்வாறே ஈசாக் ஜெராரா நாட்டிற் குடியிருந்தார். அவ்விடத்து மக்கள் அவர் மனைவியைப் பற்றி அவரை விசாரித்தபோதுஅவள் என்சகோதரிஎன்றார். ஏனென்றால் அவள் அழகுள்ளவள் ஆதலால் அந்நாட்டு மக்கள் அவள் பொருட்டுத் தன்னைக் கொல்வார்களென்று நினைத்து அவள் தன் மனைவியென்றுகூற அவர் துணியவில்லை. மேலே குறிப்பிட்ட சம்பவங்களிலிருந்து ஈசாக்கின் தந்தையாகிய ஆபிரகாம் எவ்வாறு இறைவனுடைய கட்டளைகளையும் சடங்குகளையும் ஏற்று அதை இறைவனுடைய விருப்பத்திற்குஇணங்க எவ்வாறு நிறைவேற்றுகின்றாரோ, அதேபோல் ஈசாக்கும் கடவுளுக்குக் கீழ்ப்படிந்து நடக்கின்றார்.

பின்பு ஈசாக் முதியவனானதால் அவர் கண்கள் கெட்டுப் பார்வை அற்றுப் போனார். ஒருநாள் அவர் தன் மூத்த மகன் எசாயூவைக் கூப்பிட்டு, "நானோ கிழவன்,என் மரணம் எப்போது வருமென்று அறிந்திலேன். ஆகையால் உன் வேட்டையில் அகப்பட்டதைக் கொண்டு வந்து எனக்கு விருப்பமான சமையலை நீ அறிந்துள்ளபடி சமைத்து நான் உண்ணும்படியும், சாகுமுன் முழு அன்புடன் உன்னை ஆசீர்வதிக்கவும் அதை என்னிடம் கொண்டுவா" என்றார். இரெபேக்காளோ இதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்தாள். எசாயூ தன் தந்தையின் கட்டளையைநிறைவேற்றக் காட்டிற்குச் சென்றதும், எசாயூவுக்கு ஈசாக் கூறியதை தான் அதிகமாக அன்புசெய்த மகன் யாக்கோபுவிடம் கூறி, தன்னுடைய தந்திரத்தை மேற்கொண்டுஈசாக்கின் இறுதி ஆசீரை யாக்கோபுவுக்குப் பெற்றுக்கொடுக்கின்றாள். இதைக் கேள்வியுற்ற எசாயூ யாக்கோபுமேற் கோபம்கொண்டு அவனைக்கொலைசெய்ய எண்ணுகின்றான். இதையறிந்த இரெபேக்காள் அவனைக் காப்பாற்றுவதற்காக தனது கணவர் ஈசாக்கின் சம்மதத்தோடு யாக்கோபுவை மொசொப்பொத்தேமியாவுக்கு தன் தமையனின்வீட்டிற்கு அனுப்பி வைக்கின்றாள். ஈசாக் விவிலியத்தில் ஒரு வலிமைபொருந்திய குணசீலனாகச் சித்தரிக்கப்படவில்லை. இருந்தும் இறைவனுடைய மீட்புத் திட்டத்தில் அவர் முக்கிய இடம் பெறுவதைக் காண்கிறோம். இறைவன் ஆபிரகாமுக்கு செய்துகொண்ட உடன்படிக்கையை ஈசாக்கோடு புதுப்பித்து, அவர்வழியாக ஆபிரகாமுக்குக் கொடுத்தவாக்குறுதியை நிறைவேற்றுகிறார்.

இறைவன் தம் மீட்புத் திட்டம் நிறைவேற, இஸ்ராயேல் இனத்தைத் தயாரித்தவேளையில், ஈசாக் பிதாப்பிதாக்கள் வரிசையில் இடம்பெற்று, இஸ்ராயேல் இனம் உருவாக இறைவனோடு ஒத்துழைத்தார், இவருடைய மகனாகிய யாக்கோபு வழிவந்தவர்களே இஸ்ராயேலர். இவ்வாறுஈசாக், மீட்பின் வரலாற்றிற் பங்கெடுத்து, இடம்பெறுவதைக் காண்கிறோம்.

# சிங்கள மறைவட்டங்களில் தமிழ் கிறிஸ்தவர்களுக்கு "மரியாளுடன் இறையரசு"

இலங்கையில் உள்ள தமிழ்க் கிறிஸ்தவர்கள் என்று கூறும் போது நாம்முதலில் நினைப்பது வடக்கு - கிழக்கு மாகாணங்களைத் தாயகமாகக் கொண்ட தமிழ்க் கிறிஸ்தவர்களையும், மலையகத் தமிழ்க் கிறிஸ்தவர்களையும் மட்டுமே. ஆனால் இலங்கையின் மேற்குக் கரையோரப் பகுதிகளில் வாழுகின்ற விசேடமான, வித்தியாசமான ஒரு தமிழ்க்குழுவினரை நாம் மறந்து விடுகின்றோம்.

இத்தகைய விசேடமான தமிழ்க்கிறிஸ்தவர்கள் இன்று மேற்குக் கரையோரப்பகுதிகளில் உள்ள சிங்கள, முஸ்லீம் கிராமங்களிடையே செறிந்து வாழ்கின்றார்கள். இவர்கள் 400 ஆண்டுகளுக்கு மேல் பழமைவாய்ந்த, பாரம்பரியக் கிறிஸ்தவர்கள். அயலில்உள்ள பெளத்த இஸ்லாமியர்களுடன் கலந்து வாழ்ந்த போதிலும், தம் விசுவாசத்தில் மிக வுறுதியாகத் தொடர்ந்தும் வாழுகின்றார்கள். இவர்கள் தமிழ்க்கிறிஸ்தவர்களாயிருந்த போதிலும் சிங்கள மறைமாவட்டங்களுக்குள்ளேயே அங்கம் வகிக்கின்றார்கள். சிங்களக் கிறிஸ்தவர்களுடன் மதத்தாலும் முஸ்லீம்களுடன் மொழியாலும் ஒன்றுபட்டுள்ளனர்.

இலங்கைத்தமிழ்க் கிறிஸ்தவப் பாரம்பரியம் பற்றி நோக்குவோர் இவர்களை மறந்துவிட முடியாது. இம்மக்களுடன் தங்கி ஒரு சில நாட்கள் வாழும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இதன் பிற்பாடு மரியாளுடன் இறையரசைத் தேடும் கருத்தரங்குகளை 09-04-88ல் தேற்றுப் பளையிலும், 10-04-88ல் நாவற்காட்டிலும் நடத்தினேன்.

இன்று எமது மண்ணிலும் இப் பிரபஞ்சமெங்கனுமே குழப்பங்களும், போர் பூசல்களும் நிறைந்துள்ளமையைக் காண்கின்றோம. மனிதனின் பாவமே இவற்றுக்குக்காரணம். ஆதிப்பெற்றோரிடையே பாவத்தை விளைத்த சாத்தானின் தலையை மிதிக்க வாக்குப் பண்ணப்பட்டவளே கன்னி மரியாள், இதுவே ஆதியாகமம் எமக்களிக்கும் செய்தி.

சாத்தானின் தலையை மிதிக்கும் இப்பெண்ணின் அடையாளம் ஒரு யாத்திரை செய்யும் புதிய மக்கள் கூட்டத்துக்கு வழிகாட்டுகின்றதை யாத்திரையாகமப் பயணம் சுட்டிக் காட்டுகின்றது.

இஸ்ராயேல் மக்கள் சீனாய் ஒப்பந்தத்தின் பின்னணியிலும், நிரந்தரக் குடியேற்றத்தின் பின்பும், திருயாத்திரை செய்ய மறந்த மக்களாக, கணவன் யாவேக்கு பிரமாணிக்கமற்ற தெய்வீக விபச்சாரிகளாகத் தீர்ப்புப்பெற்றமையே பழையஏற்பாட்டின் நீண்ட துன்பவியல் நாடகமாகும்.

இப் பிரமாணிக்க வீனமான நிலையினைப் பாலைவனத்தின்கூக்குரல்களான இறைவாக்கினர்கள் எலியாஸ், எலிசேயு, இசையாஸ், ஒசே, ஆமோஸ், எரேமியாஸ் போன்றோர் விமர்சித்தனர். "நீங்கள் முற்றிலும் மனமமாறி உயிருள்ள இறைவனிடம் திரும்பி வாருங்கள்" என்ற இவர்களின் செய்தியை இறைவாக்கினர்களின் இராக்கினியாகிய மரியாளும் இந் நூற்றாண்டில் அறை கூவுகின்றாள்.

முதலாம் நாட் கருத்தரங்கில் வேதாகமத்தில் இருந்து மரியாளின் இந்தச்செய்தியைக் கேட்க, நாற்பதுக்கு மேற்பட்ட இளைஞர்களும், யுவதிகளும், ஒன்று கூடினர்

இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் திருப்பலியின் பின்பு அருட்சகோதரிகள் செசிலி, ஹென்றியெலா ஆகியோரின் ஆரம்ப உரைகளுடன் ஆரம்பமாயின.

கிறிஸ்து படைக்கும் புதிய வானமும், புதியபூமியும், அவர் சிலுவை வழியே எந்த வரும். இச் சிலுவை வழியே புதிய வானத்துக்கும், புதிய பூமிக்கும், எம்மை இட்டுச் செல்லும் இராஜ வீதியாகும். இதனை செபம், இறைவார்த்தை தவம், மன்னிக்கும் அன்பு போன்றவற்றிலே பயில வேண்டுமென அழைப்பு விடுக்கின்றாள் மரியாள் சமாதானத்துக்கு இதயமாற்றமும், ஒப்புரவாகுதலுமே வழி என்று வலியுறுத்துகின்றாள். பத்திமா தொடங்கி மஜகோரி வரையிலான அவளின் இன்றைய செய்திகள் இவற்றையே உள்ளடக்கி உள்ளன.

இறுதியுரை திருவெளிப்பாட்டு நூலை மையபடுத்தி அமைந்திருந்தது. இதில் பன்னிரண்டாம் அதிகாரத்தில் விண்மீன்களைச் சூடிய பெண்ணின் அடையாளம் தரப்பட்டுள்ளது. இப் பூமி இந்நூற்றாண்டில் காணுகின்ற துன்பங்கள், வேதனைகள், எல்லாவற்றையும் சுருக்கமாக எமது மண்ணும் கண்டு வருகின்றது. இவற்றின் மத்தியில் தேவதாய் நின்றுகொண்டு இப்பிரபஞ்சத்தின் அழிவுக்குக் காலான அலகையுடன் போர் தொடுக்கின்றாள். வரவிருக்கின்ற இறுதி நாளில் துன்பங்களில் இருந்து நாம் மீட்படைய எம்மைத் தயார் செய்கிறாள்.

(திரு வெளிப்பாடு 14 : 1) அதிகாரம் 13ல் கூறப்பட்டுள்ள விலங்குடன் போரிடும் இறைவனின் திருச்செம்மறியானவரின் முத்திரை குத்தப்பட்டோர் நம்மில் எத்தனை பேர்? இதனையே மரியாள் இன்று வேண்டி நிற்கின்றாள். அவளின் ஆண்டில் ஆயர்கள் ஊக்குவிக்கும் செபங்கள், தியாகங்கள், பத்தி முயற்சிகள் எம்மை இத்தேர்வுக்கு மட்டுமே இட்டுச் செல்லவேண்டும்.

இக் கருத்தரங்குகளின் முடிவில் இளைஞர்களும் யுவதிகளுமாக இருபது பேர்" அறவழி" வாக்குத்தத்தத்தை எடுத்தனர். இறைவார்த்தையை மென்மேலும் அறிய ஆவல் கொண்டு நம்மால் நடத்தப்படும் வேதாகம அஞ்சல் பாடம் ஒன்றினையும் பெற்றுக் கொண்டனர்.

அருள்திரு ஜெயசிலன்

## எம்கருத்து

### ஆயுதக் குறைப்பு

ஆயுதப் பரிகரணம் பற்றிய ஐ. நா. சபையின் மூன்றாவது விசேட அமர்வு மே 31 முதல் ஜூன் 25 வரை நியூயோர்க் நகரில் நடைபெறவுள்ளது.

ஐக்கிய அமெரிக்காவுக்கும் சோவியத் யூனியனுக்குமிடையில் நடைபெறும் ஆயுதக் குறைப்புப் பேச்சுவார்த்தைகள் குறித்து ஜப்பானிய ஆயர் சங்கம், ஆசிய ஆயர்களுக்கு விடுத்த கோரிக்கையை எமது தலைப்புச் செய்தியாகச் சென்றவாரப் பத்திரிகையில் வெளியிட்டோம்.

"ஆயுதங்களுக்குச் செலவிடும் பணத்தை அபிவிருத்தி செய்யப் பயன் படுத்துங்கள்" என்ற எமது தலைப்புச் செய்தி எல்லா மக்களுக்கும் பொருந்தும் அழைப்பாக அமைந்தது தெளிவு.

எமது அண்மைக்கால வரலாறு, இவ் அழைப்பு, செவிடன் காதில் ஊதிய சங்கு என்பதை எமக்கு அனுபவ வாயிலாக உணர்த்துகிறது.

1983 ஆம் ஆண்டிலிருந்து எமது நாட்டில் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள், விடுதலைப் போராட்டத்தின் ஏணிப்படிகளாக, அத்தியாவசியமானவைகளாகக் கொள்ளப்பட்டன. இவற்றிற்காகச் செலவிடப்பட்ட பணம், இவற்றின் பாவனையால் ஏற்பட்ட இழப்புக்களின் பெறுமதி கணக்கிலடங்கா.

அரசின் பாதுகாப்புச் செலவினம் பன்மடங்காக்கப்பட்டது. அவை அனைத்தும் அத்தியாவசியமாகக் கொள்ளப்பட்டன. இயக்கப் போராளிகளின் செயற்பாடுகளும் ஒரு பகுதியினரால் அத்தியாவசியமாகக் கொள்ளப்பட்டன. ஆயுத உற்பத்தி நாடுகளே இவற்றைத் தூண்டி விட்டு, லாபமீட்டுகின்றன என்றும் குறை கூறப்பட்டது.

ஆனால், நடந்தவற்றை மீள் பரிசோதனை செய்து பார்க்கையில், எமது கடந்தகால சூழ்நிலைகளின் பின்னணியில் ஆயுதப் போராட்டத்தின் பல்வேறு வடிவங்களும் நமக்குப் புலனாகின்றன.

எமது மண்ணில் இடம்பெற்ற நீண்டகால இனக்கலவரங்களால் மாண்டவர்களைவிட பன்மடங்கானவர்கள் கடந்த ஆறு மாதங்களில் மாண்டுவிட்டனர். உடமைகளுக்கு ஏற்பட்ட இழப்புக்கள் கூட இரட்டிப்பானவை எனலாம். இன்றும் தொடரும் உயிரிழப்புக்களுக்கும் கணக்கில்லை.

"ஒவ்வொரு சுதந்திரமும் இன்னொரு அடிமை நிலைக்கு நம்மை இட்டுச் செல்கிறது" என்ற புது மொழி முற்றிலும் உண்மையானதா?

ஆயுதக் குறைப்பு, போர் நிறுத்தம், அமைதி, சமாதானம் இவற்றையே எல்லோரும் விரும்புகின்றனர். இவை பகற்கனவு என்றுகூறி வாழாதிருந்து விட முடியுமா?

வல்லரசுகளின் ஆயுதக் குறைப்பு நடவடிக்கைகள் நிச்சயமாக உலக நாடுகளிடையே போட்டா போட்டியைக் குறைக்கத்தான் போகின்றன. இரண்டாம் உலக யுத்தத்தின் பின் 40 ஆண்டுகள் சென்றுவிட்டன. புதிய சந்ததிகள் தோன்றி, உலக சமாதானத்துக்கு வழி தேடிக்கொண்டிருக்கின்றன.

எமது இனப்பிரச்சினையைப் பொறுத்தவரை, உள்நாட்டுப் பகைமையே, ஆயுதப் போராட்டங்கள் வளரக் காரணமாயிருந்தன. பேரினவாத அரசு தனது "சிங்களம் மட்டும்" சட்டத்தை அமுலாக்கும் முயற்சியால் இத்தனை அழிவுகளையும் தோற்றுவித்ததெனலாம். இனிமேல் தமிழ் மக்களின் உரிமை பாதுகாக்கப்படும் தன்மை உருவானால், நோக்கம் நிறைவேற, இயக்கங்கள் தேவையற்ற தன்மை உருவாக, ஆயுதப் போராட்டம் அர்த்தமற்றதாகலாம். எனவே உரிமைகள் உறுதியாகும் என எதிர்பார்ப்போம். ஆயுதக்குறைப்பு அதனால் எமது மண்ணில் கைகூடட்டும்.

"நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்பு பாராட்டும் உலகு"

# "மீட்பரின் அன்னை"

திருத்தந்தையின் சுற்றுமடல் (12)

மனுக்குலத்தின் ஒவ்வொரு தனி நபரையும், முழு மனுக்குலத்தையுமே அரவணைக்கும் இம் மறைபொருளின் மையத்தில் நிற்கும் கிறிஸ்துவின் தாய், ஒவ்வொருவருக்கும் மனுக்குலம் முழுவதற்கும் தாயாகக் கொடுக்கப்படுகிறாள். சிலுவையடியில் நிற்பவர் "அவர் அன்புச் சீடராகிய" (அரு 19:26) அருளப்பர். ஆனால், அது அவர் மட்டுமல்ல பாரம்பரியத்தைப் பின் பற்றி திருச்சங்கம் மரியாளை "கிறிஸ்துவின் தாயும் மனுக்குலத்தின் தாயும்' என அழைக்கத் தயங்கவில்லை. ஏனெனில், "ஆதாமின வழித்தோன்றலாக இருப்பதால் மக்கள் அனைவருள் அவளும் ஒருத்தியாகின்றாள் உண்மையிலே அவள் கிறிஸ்துவின் உறுப்பினர்களுக்குத் தாய், ஏனெனில் அந்தத் தலையானவரின் உறுப்பினரான விசுவாசிகள் திருச்சபையிலே பிறக்கும் படி அன்பினால் அவள் ஒத்துழைத்தாள்" (தி 53).

ஆகவே. விசுவாசத்தால் பிறப்பிக்கப்பட்ட, "மரியாளின் இப்புதிய தாய்மை" "புதிய" அன்பின் பலனாகும். இவ்வன்பானது தனது திருமகனின் மீட்கும் அன்பில் பங்கு கொண்டமையினால் சிலுவையடியில் அவளிடம் முதிர்ச்சி பெற்றது. 24. ஆகவே, முன்னோடி நற்செய்தியில் (Proto - gospel) அடங்கியுள்ள வாக்குறுதி நிறைவேறுகையில் அதன் மையத்தில் நாம் இருப்பதாக உணர்கின்றோம். "பெண்ணின் வித்து பாம்பின் தலையை நசுக்கும்" (ஆதி 3;15). மீட்பளிக்கும் தமது மரணத்தினால் இயேசுக் கிறிஸ்து பாவம், மரணம் ஆகிய தீமைகளை, அவற்றின் அடிவேரிலே வெல்லுகின்றார். அவர் சிலுவையிலிருந்து தமது தாயிடம் பேசும்போது அவளைப் "பெண்" என் அழைப்பது குறிப்பிடத்தக்கது "பெண்ணே, இதோ! உமது மகன்" எனக் கூறுகின்றார். மேலும். கானாவூரிலும் அவர் அவளை இதே விதமாக அழைக்கின்றார். (அரு 2:4) இந்தச் சொல் மரியாளது மறைபொருளின் மையத்திற்கே சென்று, மீட்பின் ஒழுங்கமைவு முழுவதிலும் அவள் வகிக்கும் தனித்துவமான இடத்தைச் சுட்டிக் காட்டுகிறது. முக்கியமாகக் கொல்கொத்தாவிலே இது பற்றி எவ்வாறு ஐயுற முடியும்? திருச்சங்கம் கற்பிப்பது போல் "சீயோனின் மாண்புமிக்க மகளாகிய மரியாளில் வாக்குறுதியை எதிர் பார்த்திருந்த நீண்ட காலம் முடிந்து புதிய திட்டம் உருவாக்கப் பெறுகிறது. மனிதனைப் பாவத்தினின்று தம் உடலின் மறை நிகழ்ச்சிகள் வாயிலாக மீட்க, இறைமகன் அவளிடமிருந்தே மனித இயல்பை எடுத்துக் கொண்டார்" (தி. 55).

## இறைவனது நித்திய திட்டத்தின்படி, மரியாளின் தெய்வீகத் தாய்மை திருச்சபையின் மீது பொழியப்படுகிறது

சிலுவையிலிருந்து யேசு கூறிய வார்த்தைகள், கிறிஸ்துவைப் பெற்றவளது தாய்மை திருச்சபையிலும் திருச்சபை வழியாகவும் ஒரு "புதிய விதத்தில்" தொடர்கிறது என்பதையும், அருளப்பர் திருச்சபையின் அடையாளமாகவும் பிரதிநிதியாகவும் இருக்கிறார் என்பதையும் குறிக்கின்றன. இவ்வாறு "அருள் நிறைந்தவளாக" கிறிஸ்துவின் தாயும் அதனால் இறைவனின் திருத்தாயும் ஆகும்படிக்கு கிறிஸ்துவின் மறைபொருளுக்குள் கொண்டுவரப்பட்ட அவள் திருச்சபைமூலம் மீட்பு வரலாற்றின் தொடக்கத்திலே ஆதியாகமத்திலும், (3:15), மீட்பு வரலாற்றின் இறுதியிலே திருவெளிப்பாடு ஆகமத்திலும் கூறப்பட்ட "பெண்ணாக" அந்த மறைபொருளில் இருந்து வருகிறாள், இறைவனது நித்திய திட்டத்தின்படி, மரியாளின் தெய்வீகத் தாய்மை திருச்சபையின்மீது பொழியப்படுகிறது பாரம்பரியக் கூற்றுக்கள் இதைச் சுட்டிக் காட்டுகின்றன. இதன்படி மரியாள் திருச்சபைக்குத் "தாயாக" இருப்பது அவள் இறைமகனின் தாயாக இருப்பதன் பிரதிபலிப்பும் தொடர்ச்சியுமே ஆகும்.

திருச்சங்கத்தின் கூற்றுப்படி, திருச்சபை பிறந்து உலகிற்கு முழுமையாக வெளிப்படுத்தப்பட்ட அந்த வேளை மரியாளின் தாய்மை இவ்வாறு தொடர்ந்து வருவதைக் காண்பதற்குத் துணைபுரிகிறது. "கிறிஸ்துவால் வாக்களிக்கப்பெற்ற ஆவியானவர் வரும்வரை மனுக்குல மீட்பின் மறைபொருளை ஆடம்பரமாக வெளிப்படுத்த இறைவன் விரும்பவில்லை. எனவே, ஐம்பதாம் நாள் விழாவரை அப்போஸ்தலர்கள் 'பெண்களோடும் இயேசுவின் தாய் மரியாளோடும், அவர் சகோதரரோடும் ஒரே மனதாய் செபத்தில் ஈடுபட்டிருந்தார்கள்' (அப் 1:14) என்று படிக்கிறோம். ஏற்கெனவே — வானவன் தூது உரைத்த நேரத்திலேயே — தன் மேல் நிழலிட்ட ஆவியானவரின் கொடைக்காக மரியாள் வேண்டிக் கொண்டிருப்பதைக் காண்கிறோம்" (தி 59).

ஆகவே, பரிசுத்த ஆவியின் செயலாற்றலால் நிகழ்ந்த மீட்பின் ஒழுங்கமைவில் வார்த்தையானவர் மனுவுருவெடுத்த நேரத்திற்கும் திருச்சபை உதயமாகிய நேரத்திற்கும் இடையில் ஒரு தனிப்பட்ட தொடர்பு இருக்கிறது. இந்த இரு நேரங்களையும் இணைப்பவர் மரியாள்: நசரேத்தூர் மரியாளும், எருசலேமின் மாடி அறையிலிருந்த மரியாளும், இந்த இரண்டு நிகழ்ச்சிகளிலும் அவளது அமைதியான, ஆனால் இன்றியமையாத பிரசன்னம் "பரிசுத்த ஆவிவழியாக வரும் பிறப்பை" சுட்டிக்காட்டுகின்றது. ஆகவே, கிறிஸ்துவின் மறைபொருளில் தாயாகப் பிரசன்னமாயிருந்தவள்—திருமகனின் சித்தத்தின் படியும் பரிசுத்த ஆவியின் வல்லமையாலும் — திருச்சபை என்னும் மறைபொருளில் பிரசன்னமாகின்றாள். திருச்சபையிலும் அவள் ஒரு தாய்மையின் பிரசன்னமாகத் தொடர்ந்து இருக்கிறாள் என்பதை சிலுவையிலிருந்து கூறப்பட்ட வார்த்தைகளே காட்டுகின்றன. "பெண்ணே, இதோ உமது மகன்!" "இதோ, உன் தாய்" (அரு 19:26).

### பகுதி II

## பயணம் செய்யும் திருச்சபையின் மையத்தில் இறைவனின் அன்னை

1. இறைமக்கள் கூட்டமாகிய திருச்சபை உலகின் சகல இன மக்களிடையிலும் பிரசன்னமாயிருக்கிறது.

25 திருச்சபையானது "அந்நிய நாட்டிலுள்ள ஒரு யாத்திரிகனைப் போல் உலகின் துன்பங்கள் இறைவனின் ஆறுதல்கள் இவற்றின் நடுவிலே வழி நடந்து முன்னேறிச் செல்கிறது. ஆண்டவர் வரும்வரை அவரது சிலுவையையும் சாவையும் அறிவித்துக் கொண்டிருக்கின்றது (1 கொரி 11 : 26)" (தி 8). "பாலைநிலத்தில் வழி நடந்ததும் ஊனிலிருந்து உருவானதுமான இஸ்ராயேல், ஏற்கெனவே இறைவனின் திருச்சபை என்று அழைக்கப் பெற்றிருக்கிறது (2 எஸ் 13:1; எண் 20:4; உபா 23:1 தொ). அது போல புது இஸ்ராயேலும், கிறிஸ்துவின் திருச்சபை என்று பெயர் பெறுகிறது (மத் 16:18) ஏனெனில், கிறிஸ்துவே தமது குருதியைக் கொடுத்து அதைத் தமக்காகவே வாங்கியுள்ளார் (அப் 20:28). தம் ஆவியானவரால் அதை நிரப்பியுள்ளார்; காணக் கூடிய சமுதாய ஒன்றிப்புக்குத் தேவையான வழிவகைகளை அதற்குத் தந்துள்ளார். இயேசுவை ஈடேற்றத்தின் காரண கர்த்தாவாகவும், ஒற்றுமை அமைதி ஆகியவற்றின் சுனையாகவும் விசுவாசக் கண் கொண்டு நோக்குபவர்களைக் கூட்டி ஒன்று சேர்த்து இறைவன் திருச்சபையை ஏற்படுத்தினார். அனைவருக்கும் அது ஈடேற்றம் தரும் ஒற்றுமையின் காணக்கூடிய திருவருட்சாதனமாக அமையும் படி அதை இவ்வாறு நிறுவினார்" (தி 9).

இரண்டாம் வத்திக்கான் சங்கம் பயணம் செய்யும் திருச்சபையைப்பற்றிக் கூறும் போது, பழைய ஏற்பாட்டில் பாலைவனத்தில் பயணம் செய்த இஸ்ராயேலோடு அதை ஒப்பிட்டுள்ளது. இப் பயணம் எங்கு எப்போது, வரலாற்று ரீதியாக இடம் பெறுகிறதோ,

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)



# வாசகர் கருத்து



அன்பு வி. பி. அவர்கட்கு,

தமிழ்க் கத்தோலிக்க மக்களுக்கு அறிவுக் களஞ்சியமாக யாழ்நகரிலிருந்து உதயமாகும் பாதுகாவலன் இதழில், கடந்த சில ஆண்டுகளாகத் தாங்கள் படைத்துவரும் இளைஞர் உலகம் என்ற மடற்பகுதியைத் தவறாமல் வாசித்துவரும் வாசகர்களில் நானும் ஒருவன்.

அண்மைக்காலத்தில் நாட்டில் ஏற்பட்ட அநாகரீகமான, அசம்பாவிதங்கள் மத்தியிலும் எம் போன்ற இன்றைய இளைஞர்களைச் சிந்திக்கச் செயற்படவைத்தமைக்காக தாங்கள் படைத்த மடல்கள் அமைந்திருப்பதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இளைஞர் உலகம் மகிழ்வுறும் என உறுதி கூறுகிறேன்,

'அன்பு இளம் உள்ளங்களுக்கு' என்று தொடங்கி 'அன்பு நெஞ்சன் வி. பி' எனத் தாங்கள் நிறைவு செய்யும் மடல்களுள் மறைந்திருக்கும் கருத்து முத்துக்கள் இளம் உள்ளங்களைச் சிந்திக்கத் தூண்டியுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறேன்.

இன்று அசம்பாவிதங்களினால் பல பாகங்களிலும் சிதறி வாழும் என் போன்ற இளைஞர்களை ஒன்று சேர்க்கும் முயற்சியாக ஓர் ஒன்றுகூடல் நிகழ்ச்சியைத் தாங்கள் நடத்தினால் இளைஞர் உலகும்மிகுந்த பயனடையுமென நம்புகிறேன். அத்துடன் இளைஞர்களை நாம் சந்திக்கும் வாய்ப்பு ஒன்று ஏற்பட இவ் ஒன்றுகூடல் நிகழ்ச்சிஉதவியுரியுமெனஉறுதி கூறுகிறேன். அத்துடன் இவ் ஒன்றுகூடல்நிகழ்ச்சியைப் பாதுகாவலன் இளைஞர் உலகம் சார்பாக நடாத்தவேண்டுமென பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். அத்துடன் இனிவரும் காலத்திலும் இளைஞர் உலகம் சிறப்படையத் தங்கள் ஆக்கங்களை பாதுகாவலன் மூலம் எம் சிந்தனைக்குவிருந்தாகக்கொடுப்பீர்கள் என்ற நம்பிக்கையுடன் இக்கடிதத்தை நிறைவு செய்கிறேன்.

—ம. ஜோண் பற்றிக்
டாக்டர் சுப்பிரமணியம் வீதி.
சுன்னுகம்.

---

இளைஞர் உலகம்,
அ. ம. தி. குருமடம்,
கொழும்புத்துறை,
29-04-88




அன்பு இளம் உள்ளங்களுக்கு!

பொதுவாகப் பெண்களிடையே தான்தான் அழகு ராணி, பெருமைக்குரியவள் என்ற எண்ணம், போட்டி மனப்பான்மை காணப்படுவது இயல்பு. இரு பெண்கள் போட்டி, பொறாமை இன்றி அன்பாய் வாழுகின்றார்கள் என்றால் அது அபூர்வம் எனக் கூறும் அளவிற்கு அவர்களிடையே பிளவு மனப்பான்மை காணப்படும்.

ஒருமுறை மூதேவியும் சீதேவியும் திருமாலைச் சந்தித்து, ''எங்கள் இருவரில் யார் அழகி?'' என்று கேட்டார்கள். இருவரையும் சிறிது தூரம் போய்வருமாறு திருமால் அவர்களைப் பணித்தார். திரும்பிவந்ததும் திருமால் மூதேவியைப் பார்த்து,

''நீ போகும்போது அழகாயுள்ளாய்'' என்றும்
சீதேவியைப் பார்த்து,
''நீ வரும்போது அழகாயுள்ளாய்'' என்றும் கூறினர்.

''அகத்தின் அழகு முகத்தில் தெரியும்'' என்பது முதுமொழியாகும். உள்ளத்தின் அழகுதான் உடலிற் புலப்படுகின்றது. தீய பண்பாடுகள், தீய பழக்கவழக்கங்கள், தன்னலம், அகந்தை ஆணவம், பெருமை, பொறாமை, களவு, கற்பழிப்பு போன்ற மூதேவியின் தரிசனங்கள் எம்மைவிட்டுப் பிரிகின்ற பொழுது எமது உள்ளம் அழகுள்ளதாகக் காணப்படுகின்றது.

இவ்வாறே இறைபக்தி, பிறரன்பு, பகிர்தல், விருந்தோம்பல், பணிபுரிதல், சமூகநலன் பேணல் போன்ற சீதேவியின் சிறப்புப் பண்புகள் எம்மைத் தேடிவருகின்றபொழுது எமது உள்ளம் அழகுள்ளதாகின்றது.

அன்புறவின் அடிப்படையில் ஒருவரது அழகு இரசனைக்குரியதாகும். அங்கத்தில் குறைவிருந்தாலும் அன்பினிற் குறையாத மனிதர்கள் தான் அனைவராலும் விரும்பப்படுகின்றார்கள். அவர்களின் நெஞ்சங்களில் சீதேவியின் தாலாட்டுப் பாடல்கள் ஒலிக்கும். இறைவன் வாழும் இல்லங்கள் அவர்களே.

நல்லனவற்றையே நாடி
நலமுடன் வாழுங்கள்.
நல்வாழ்த்துக்களுடன்,

அன்பு நெஞ்சன் வி. பி.

## குருசுமுத்தண்ணையின் கிசு கிசு-17

அடைக்கலம்: இந்தமுறை கோயில் திருவிழா பெரிசா நடக்குது அண்ணே. ஐந்து மூடையில அன்னதானமாம். இரண்டு மூடை கஞ்சியுமாம், வெளிநாட்டுப் பெடியள் காசு அனுப்பிச், செய்யுறுங்கள் அண்ணே.

குருசுமுத்தண்ணே: அப்பதான் இப்படி எண்டா இப்பவும் இதுகள் நடக்குது தானே? எல்லாம் பெயருக்காகத்தான் திருவிழாக்கள் போல!

அடைக்கலம்: ஏன் அண்ணே அப்படிச் சொல்றியள்?

குருசு: எடதம்பி, இப்ப ஆரு பட்டினியில் சாப்பிட வந்திருக்குதுகள்? உண்மையான பசிச்சவனது வயிறு வாழ்த்தவேணும். ஊரில எத்தனை சிறுவர் முதியோர் அனாதை இல்லங்கள் இருக்குது? அன்றாட உணவில்லாது எத்தனை ஜீவன்கள் வாடுது? அதுகளுக்கு அன்போடு திருவிழாப் பேரால கொடுத்தா அதுகளும் திருவிழாவில கலந்த மாதிரி இருக்கும் எல்லே தம்பி?

---

சிந்தனைத் துணுக்கு

### முயற்சி எடுப்பதில்லை

* மனிதர்களை மனவருத்தத்திற்குள்ளாக்கி விட்டு, அவர்களோடு சமாதானம் செய்து கொள்ளத் துடிக்கின்ற சில மனிதர்கள், கடவுளை மனவருத்தத்திற்குள்ளாக்கிய பிறகு அவரோடு சமாதானம் செய்து கொள்ளச் சிறிதளவு முயற்சியும் எடுப்பதில்லை.

★ ★ ★

### வாழ வாழ்

ஓ மானுடனே!
மரணித்த ஜீவனுக்காகக்
கண்ணீர் விடாதே;
ஜனனித்த ஜீவனுக்காகக்
கவலைப்படு:
அவர்கள் கண்ணீரைப்
பன்னீராக்க
உன் உயிரைக்
கொடுக்கவேண்டாம்
மாறாக
உழைப்பைக் கொடு
ஊதியத்தைக் கொடு
வாழவிடு
அதற்காக
நீயும் வாழ்
உன் சகோதரனையும்
வாழவை

— வளன் றேசா

★ ★ ★

துன்பங்களைக் கண்டு
துவண்டுவிழாது
துயரங்களைக் களையத்
துணைநிற்போம்

---




புதிய எழுத்தாளர்களைக் குடும்பம் ஒரு கதம்பப் பகுதிக்குச் சேர்த்துக்கொள்வது தான் ஆசிரியரின் நோக்கமா? அப்படியாயின் பாராட்டுக்கள்.

வாசகராகிய நாம் எதிர்பார்ப்பது இப்பகுதியிற் புதியதைப், புதிய சிந்தனையை, புதிய அறிவுரைகளை ஆனால் எழுத்தாளர்களைப்பற்றி நாம் அக்கறை எடுக்கவில்லை.

இது ஒரு தொடர்பகுதி. ஆரம்பகாலத்தில் இருந்து படிப்படியாக முன்னேறும் பகுதி. அந்தந்தப் படிமுறைகளுக்கு ஏற்ப எழுத்தாளர்கள் ஆக்கங்களை எழுத வேண்டும். தரமானவற்றை ஆசிரியர் பிரசுரிக்க வேண்டும்.

தொடர்பகுதி ஆகையால் பழைய எழுத்தாளர்கள் மீண்டும் மீண்டும் ஆக்கங்கள் எழுதலாம். எனவே இதுவரை குடும்பம் ஒரு கதம்பப் பகுதியில் பிரசுரிக்கப்படாத கருத்துக்கள் ஆனால் இப்பகுதிக்கு உட்பட்டவற்றை பிரசுரிக்கும்படி வேண்டுகிறேன்.

இப்படி எழுதுவது பழி கூற அல்ல இப்பகுதியை விறுவிறுப்பு ஆக்கவும் வாசகர் பல பயன்களைப் பெறவும் ஆசிரியர் பாராட்டுப் பெறவுமே.

வாரம் ஒருமுறை இப் பத்திரிகை வெளிபிடப்படுவதால் எப்போது குடும்பம் ஒரு கதம்ப மலரை நுகர்வோம் என்ற ஆவலுடன் காத்திருந்து முதலில் நுகர்வது இவ் வாசனையுடைய மலரையே. இவ்வளவு நாளும் சுகந்தத்தை நுகர்ந்த எமக்கு ஒரு முறையேனும் மாறாக நுகரமுடியவில்லை. காரணம், ஆசிரியரின் எழுத்தாற்றலே.

மணமான வாழ்விற்கு மணியான யோசனைகள், ஆரம்பத்தில் வெளியாகிய கருத்துக்கள் சில இருந்தாலும் நன்றாக அமைகிறது. சகோதரி சோபியாவிற்குப் பாராட்டுக்கள். அவவின் எழுத்தாற்றல் சிறக்க வாழ்த்துக்கள்.

யோகேஸ்,
யாழ் / பல்கலைக்கழகம்.

## கணவனுக்குச் சில அறிவுரைகள்

மனைவி இறைவனால் உங்களுக்குக் கொடுக்கப்பட்ட துணை என்பதை உணர்ந்து அவளைச் சமமாக மதித்து அன்பு செய்தல் உங்கள் கடமையாகும்.

இயேசு திருச்சபையை நேசித்ததுபோல் நீங்களும் உங்கள் மனைவியரை நேசியுங்கள். உள்ளத்தை ஒருத்திக்குக் கொடுத்த பின் அவளை உங்களைப்போல் மதியுங்கள்.

நீங்கள் குடும்பத் தலைவன் என்ற முறையில் உங்களுக்கு அதிகாரங்கள் உண்டு. அதிகாரங்களைக் குடும்ப நலனுக்காகப் பயன்படுத்துங்கள். ஆட்சி செலுத்துவதற்காகப் பயன்படுத்த வேண்டாம்.

பெண்களின் குணுதிசயங்கள் ஆண்களிலிருந்து வேறுபட்டது என்பதை உணர்ந்து செயற்படுங்கள். அவர்களின் மனநிலை குழம்பியிருக்கும் போது திருத்த முற்படவேண்டாம். பிரச்சனைகளைச் சமாதானமாகத் தீர்த்துக் கொள்ளுங்கள்.

முற்கோபத்தைக் கட்டுப்படுத்துங்கள். தவறினால் குடும்பத்திற் கொந்தளிப்புக்கள் ஏற்படக் கூடும். மனைவியிடம் குற்றம் காண்பதையே பழக்கமாக்கிக் கொள்ளாதீர்கள். தாங்கிக் கொள்ளும் பழக்கத்தைக் கற்றுக் கொள்ளுங்கள்.

சூது விளையாடல், மது அருந்தல், அயல் பெண்களுடன் சகவாசம் முதலிய பழக்கங்களைக் கைவிடுங்கள். குடி குடியைக் கெடுக்கும் என்பார்கள். இது பல பிரச்சனைகளைக் கொண்டுவரும்.

குடும்பத்திற் பொறுப்புள்ளவர்களாக நடந்து கொள்ளுங்கள். உழைத்து வருவாயை அதிகரித்துக் கொள்ளுங்கள்.

பணம்தான் பலபிரச்சனைகளுக்குக் காரணமாகும். இதில் மனைவிக்கு முக்கிய பொறுப்புண்டு. பணத்திற்குக் கடைசிவரை கணக்குக் கேட்பது பணிப்பெண்களைப் போல் நடத்துவதற்குச் சமனாகும்.

உங்கள் மனைவி ஆண்களிடம் கதைத்து விட்டால் உடனே சந்தேகப்படவேண்டாம். அவர்களுடன் எரிந்து விழாதீர்கள். அவர்களுக்குள்ள சுதந்திரத்தைப் பறிக்கவேண்டாம். கணவர்களே உங்கள் மனைவியர்க்கு அன்பு செய்யுங்கள். அவர்கள்மேல் எரிந்து விழவேண்டாம்.

# அருள்வாக்கு அறிவோம்

## ஞான இலக்கிய நூல்கள் (12)

திருமறைப்பணி நிலையம்
த. பெ. இல. 2,
ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.

### சீராக் ஆகமம்

**முன்னுரை:**

இந்நூலானது கி. மு. 190-ம் ஆண்டளவில் பென் சீரா என்பவரால் எபிரேய மொழியில் எழுதப்பட்டது. பின்னர் கி மு 132-ம் ஆண்டளவில் அவருடைய பேரனுரால் கிரேக்க மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது.

அந்தியோக்காப் எப்பிபானஸ் காலத்தில் (கி. மு. 175–163) இடம் பெற்ற வேதகலாபனைக்கு முன்னர் கிரேக்க அஞ்ஞானிகளுடைய வாழ்க்கை முறை யூதர்களிடையே பெரும் செல்வாக்குப் பெற்று வந்தது. இந்தப் பாதிப்பில் இருந்து அவர்களை விலகி வாழச்செய்யும் நோக்குடனேயே இந்நூல் எழுதப்பட்டது.

கிரேக்கரைப் பொறுத்தவரையில் இந்நூல் சட்ட இலக்கிய நூல்களின் வரிசையில் இடம்பெறுகின்றது. இதிற் காணப்படும் சிந்தனைகள் பழமொழியாகமத்திலுள்ள சிநதனைகளை விட ஒருபடி வளர்ச்சி மிக்கதாகக் காணப்படுகின்றன. இரு நூல்களும் ஞானத்தை மனிதனுக உருவகித்தபோதிலும் இந்நூல் பல்வேறு வாழ்க்கை விடயங்களை உள்ளடக்குவதோடு பாரம்பரியக் கொள்கைகளின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தி நிற்கின்றது.

நாளாந்த வாழ்வில் நாம் எதிர்கொள்ளும் உண்மைகளான ஞானம், நீதி, அன்பு, பாவம், புண்ணியம், செபம் என்பவற்றின் தன்மைகளை விரிவாகவும் விளக்கமாகவும், துலக்கமாகவும் இந்நூல் எடுத்தியம்புகின்றது.

ஆதித் திருச்சபையில் வாழ்ந்த கிறிஸ்தவர்களுக்கு அவர்களின் வாழ்க்கை நெறியின் கைநூலாக இது திகழ்ந்தது. இதனுல் லத்தீன் மொழிபெயர்ப்பு இதனைத் 'திருச்சபை நூல்' என அழைக்கின்றது. நூலின் சிந்தனைகள் அடுத்த இதழில்

எஸ். இயூஜின் பிரான்சிஸ்

# பைபிள் மாமா

வணக்கம் மருமக்களே!

''சோதோம்'' ''கொமாரு'' என்ற பட்டினங்களைத் தேடிப் போன ஆண்டவரின் தூதர்கள், வீடு வீடாகச் சென்று தேடுதல் வேட்டை நடத்துகிறுர்கள்.

''பயங்கரவாதிகள் உண்டா'' என்று நம்ம மக்கள் மத்தியிலே இப்போ நம்ம படையினரும் அயல் நாட்டுப் படையினரும் தேடி வன்செயலில் ஈடுபட்டு அடாவடித்தனம் பண்ணுகிறுர்களே! அதுபோல அல்ல!

நல்லவர்கள்- ஆண்டவனுக்கு ஏற்றவர்கள் அவர்சொற்படி வாழ்பவர்கள் யாராவது உண்டா?...... இலட்சத்தில் ஒருவராவது இருப்பார்களோ? பார்ப்போம்! அப்படி ஒருவராவது இருந்தால் அவர்களன் பொருட்டாவது சமாதானத்துக்கு வருவோமே—என்று!

ம்க்கும். விரல் விட்டு எண்ணக் கூடியவர்கள் கூட அங்கே இல்லை. இச்செய்தியை ஆண்டவனிடம் தெரிவிக்கிறுர்கள்.

நம் ஆண்டவனுக்கு மகா கோபம்! என்னடா......? இத்தனை இலட்சக் கணக்கான மக்களை நான் படைத்தும்—என் உயிர் மூச்சை அவர்கள் முகத்தில் ஊதியும்—என் சாயலாக வாழ்ந்து, என்னைப் பிரதிபலியுங்கள் என்று அறிவுறுத்தியும்—எனக்கேறறவர்கள் ஒருவர் கூட இல்லையா...?

அப்படியானுல் இவர்கள் அனைவரையும் நான் ஒரேயடியாகத் தீப்பிழம்பாககத் தீர்மானித்துவிட்டேன்! என்று சொல்லிச் சீற்றத்துடன் புறப்படுகிறுர்!

இச் செய்தி எப்படியோ ஆபிரகாமுக்குக் கிடைத்து விடுகிறது. நாடு முழுவதும் அழிவதா? நம் மக்கள் அனைவரும் கருகிச் சாம்பல் ஆவதா?

ஒருபோதும கூடாது. நான் எப்படியும் ஆண்டவரிடம் பரிந்து பேசி இம்மக்களைப் பாதுகாப்பேன் என்று உறுதியுடனும் துணிவுடனும் ஓடோடிச் சென்று இறைவன் காலடியிலே விழுகிறுர்

விழு தவர் என்ன சொல்லி முறையிட்டிருப்பார் என்றுதானே நீங்கள் கேட்கிறீர்கள்?

சொல்வேன்—பொறுங்களேன்.

அன்புடன் பைபிள் மாமா.

அறிந்து கொள்ளுங்கள் 34

## சூசையை அறியாதவன் II

ஆறிடும் மேடும் மடுவும் போல் இன்பமும் துன்பமும் மாறி மாறி வரும் இவ்வுலகில். அதேபோல் இஸ்ராயேல் மக்களின் வாழ்விலும் துன்பம் வந்தது. ஆயர் அரசர் எகிப்தை ஆட்சிசெய்த காலத்தில் இஸ்ராயேல் இனம் மகிழ்ச்சியாக வாழ்ந்தனர். 400 ஆண்டுகள் ஆயர் அரசர் எகிப்தை ஆண்டனர். இந்த ஆட்சிக்காலத்தில் 300 ஆண்டுகளுக்குப் பின் எகிப்திய அரசபரம்பரை உரிமை உணர்வுகொண்டு ஆயர் அரசருடன் போரிட்டனர். ஆனுல் எகிப்தியப்படை தோல்வி அடைந்தது. சுமார் 50 ஆண்டுகளுக்குப்பின் எகிப்திய அரசின் பதினெட்டாம் பரம்பரையைச்சேர்ந்த ஆமோசேசு என்ற மன்னனின் தலைமையில் எகிப்தியர் பெரிய படையுடன் சென்று போரிட்டு 'வைறக்கோசு' இனத்தவரை வென்றனர். அத்தோடு அவர்களை விரட்டிக்கொண்டு பாலஸ்தீன் பகுதியைத் தாண்டிச் சென்றனர் என்று வரலாறு கூறுகின்றது.

இந்த உரிமைப்போரில் இஸ்ராயேல் மக்கள் தங்களுக்கு உதவிசெய்து வைறக்கோசு அரசர்களுடன் போரிடுவர் என எகிப்தியர் எதிர்பார்த்தனர். ஆனுல் இஸ்ராயேல்மக்கள் தங்களை வரவேற்றுப் பசிபோக்கி இருக்கஇடமும் கொடுத்து உபசரித்த ஹைறக்கோசு இனத்தவர் மீது போர் தொடுப்பது நன்றிகெட்ட செயல் என நினைத்து உரிமைப் போரில் அவர்கள் எப்பக்கமும் சேரவில்லை. நடுநிலையாக ஒதுங்கி நின்றனர். இதன்பின் இஸ்ராயேலின் நிலை இரங்கத்தக்கதாக மாறியது.

பத்தொன்பதாம் பரம்பரையைச் சேர்ந்த முதலாம சேத்தி பட்டத்திற்கு வந்தான். இஸ்ராயேல்மக்களைக் கொடுமைப்படுத்தத் தொடங்கினன். இவன் ஓராண்டு ஆட்சிசெய்தான். பின்னர் இவன் மகன் இரண்டாம் இரமேசேசு அரியணை ஏறினன். இவனே இஸ்ராயேல் மக்களைக் கசக்கிப் பிழிந்து வாட்டி வதைத்தவன் இவன் 18 ஆண்டுகள் ஆட்சி புரிந்தான். இவன் தென் எகிப்திலிருந்த தீப்சு பட்டணத்தை விட்டு வடபகுதிக்கு தலைநகரை மாற்றினுன். அங்கு பல கட்டிடங்களைக் கட்டினுன். இவன் கட்டிய கட்டிடங்களில் பித்தோம், இரமேசேசு என்பவை முக்கியமானவை. இவனே இஸ்ராயேல்மக்களை களஞ்சியங்கள் கட்டப் பயன்படுத்தியவன். இவனைப் பற்றியே யாத்திரையாகமம் சூசையை அறியாத மன்னன் (யாத் 1 : 8) என்று கூறுகின்றது. இவனின் கொடுமை படிப்படியாக உயர்ந்து கொண்டு சென்றது. இதற்குக்காரணம் ஓடிப்போன ஹைறக்கோசு அரசர் மீண்டும் வந்து போரிடும்போது இஸ்ராயேலர் பகைவர்களோடு சேர்ந்து தம்மை எதிர்ப்பார்களோ என்ற அச்சமேதான். அல்லது அவர்கள் எகிப்தை விட்டுப் போய்விட்டால் வேலை செய்ய அடிமைகள் கிடைக்க மாட்டார்கள் என்ற பயமும் காரணம்.

இ. ம. ஜெயசீலன்.

# காவலன் கண்மணிகள்

மடல்: 7.

அன்புக் கண்மணிகாள்!

தியாகத் தலைவர் எம் நாதர் யேசுவின் ஆசி என்றும் உம்முள் நிறைவதாக.

17-4-88 ஞாயிறு காலை 10-45 மணிபோல் தூரதர்ஷன் தொலைக்காட்சியில் வீரம் மிக்க சிறுவர்களின் வீரவரலாறு பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. மொழி புரியாத போதும் தியாகச் செயல்களைப் புரிந்து கொள்ள முடியும், உணர்ந்து கொள்ள முடியும்.

ஏழைப் பெற்றோரின் இரு புதல்வர்களில் மூத்தவன் 13 வயதுள்ளவன்; கால் ஊனமுற்றவன்; ஊன்று கோலுடன் நடப்பவன், ஓடிப்பிடித்து விளையாடும் சிறுவர்களை ஓர் இடத்திலிருந்து அவன் பார்த்துக் கொண்டிருந்தான். 10 மீற்றர் தூரத்தில் ஒரு சிறுமியும் இருந்து விளையாட்டைப் பார்த்து ரசித்திருந்தாள்.

அவ்வேளை பற்றைக்குள்ளே இருந்து கறுத்தநாக பாம்பு நெளிந்து, நெளிந்து சிறுமியை நோக்கி ஊர்ந்து வந்தது. பாம்பைக் கண்டதும் சிறுவர்கள் ஓடி ஒதுங்கினுர்கள், ஊனமுற்ற சிறுவனே! ஊன்று கோல்களுடன் எழுந்தான். மெல்ல மெல்ல பாம்பை நோக்கி ஊன்று கோலுகளுடன் கெந்திக் கெந்திச் சென்றுன்.

பாம்பு படமெடுத்தது. சிறுமி ஆடாமல், அசையாமல் இருந்தாள். படமெடுத்த பாம்புக்கு தன் ஊன்று கோல்களால் அடித்தான் மண்ணுக்குள் அதன் தலையை அமுக்கினுன், பலமெல்லாம் ஒன்று திரட்டி அதன் தலையை மீண்டும் மீண்டும் அமுக்கினுன்.

பாம்பு இறந்து விட்டது. சிறுவர்கள் ஒன்று கூடி ஒரு முகமாக ஊனமுற்ற சிறுவனைப் பாராட்டினுர்கள். சிறுமி நன்றியுடன் சிரித்தாள்.

வீர விருதும் அவனுக்குக் கிடைத்தது. இச்சிறுவனுக்குக் கிடைத்த விருது போல் உங்களுக்கும் வீரவிருது பெறும் நாள் வரவேண்டுமென்று இறை யேசுவிடம் வேண்டி விடை பெறும்.

அன்பின்
அன்பு விழி

### அன்பு விழிக்கு அன்புக் கணை:

என் அன்பின் அன்பு விழிக்கு

காவலன் கண்மணிகளில் நானும் ஓர் அங்கத்தவன். பாதுகாவலனில் நான் விரும்பிப் படிப்பது காவலன் கண்மணிகள், ஆகும். கட்டுரை எழுதி அனுப்ப ஆசிக்கிறேன். அனுப்பலாமா? கட்டுரையின் தலைப்பு.

''பொது வாழவில் பொது நிலையினர்'' என்பதாகும்.

பதில் போட மறக்க வேண்டாம்.

இப்படிக்கு
காவலன் கண்மணி
வி. மறின் நிலாணி
அங். எண்: 18.

கட்டுரையை அனுப்பவும். தரம் கண்டு பிரசுரிப்போம்.

### ஒப்படை

| | | |
|---|---|---|
| ஒப்படை | ஒப்படை | ஒப்படை |
| பாடல்கள் | முழுதும் | ஒப்படை |
| வீடு | நிறைய | ஒப்படை |
| வீதி | வழிய | ஒப்படை |
| பொறுப்பை | மற்றவரிடம் | ஒப்படை |
| பணத்தைக் | கடையில் | ஒப்படை |
| காலம் | முழுதும் | ஒப்படை |
| எங்கு | முடியும் | ஒப்படை |

எழுதியவர்: 'நிரஞ்சன்'

### நேரம் பொன்னுனது

முன் யோசனையுடன் ஒவ்வொன்றையும் திட்டமிட்டுத் தீர்மானித்துச் செயற்படுங்கள்.

கடந்த திகதியோ, நாளோ, நிமிடமோ மீண்டும் திரும்பி வராது. கடின உழைப்புக்கு நிகர் எதுவுமில்லை. எனவே நேரத்தைச் சிக்கனப்படுத்துங்கள்.

ஒவ்வொரு காரியத்திற்கும் நேர அட்டவணை போட்டுக் கொள்ளுங்கள். செபித்தல், படித்தல், விளையாடுதல், ஓய்வு எடுத்தல், காவலன் கண்மணிகளுக்கு கதைகள் கட்டுரைகள் எழுதுதல் போன்றவை உங்கள் செயல்களில் அடங்கட்டும்.

விடுமுறைகளை விவேகமாகக் கழிக்கக் கற்றுக்கொள்ளுங்கள்.

— அபதா —

## வேதாகம வினாவிடைப் போட்டி—15

விடைகளை மாத்திரம் தபால் அட்டையில் தெளிவாக எழுதி, உங்கள் பெயர், முகவரியுடன் 15-5-88ஆம் திகதிக்கு முன் பாதுகாவலன், த. பெ. இல. 2, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள். பரிசு ரூ 25/=. விடையும், பரிசுபெறுபவர் பெயரும், அடுத்த போட்டியும் 27-5-88இல் வெளிவரும். விடைகளை யோசுவா ஆகமம் 6—10 அதிகாரங்களிற் காணலாம்.

### வினாக்கள்

1. எரிக்கோ நகர மதில்கள் கடகடவென்று இடிந்து விழக் காரணம் என்ன?
2. இராக்காப் ஏன் உயிர்ப்பிச்சை பெற்றாள்?
3. இஸ்ராயேலர் புறமுதுகு காட்டி ஓடக் காரணம் என்ன?
4. மோயீசன் எழுதிய உப ஆகமச் சட்டத்தை யோசுவா எங்கு பொறித்தார்?
5. கபயோனியர் இஸ்ராயேலரை ஏன் ஏமாற்றினர்?
6. கபயோனை முற்றுகையிட்ட அரசர்கள் யார்?

### போட்டி - 14. சரியான விடைகள்

1. நூன்.
2. எரிக்கோ.
3. யோர்தான் நதியின் நீரை வற்றச் செய்து இஸ்ராயேல் மக்கள் முன் அவரை மேன்மைப் படுத்தினார்.
4. ஆயுதம் தாங்கியவராய்.
5. அமோறையரின் அரசர்கள், கானான் அரசர்கள்.
6. கானான் நாட்டின் விளைச்சலை உண்டதனால்.

### சரியான விடை எழுதியோர்,

1. பவானி வடிவேல், அலவக்கரைவீதி, சம்மாந்துறை.
2. அ. கலிஸ்ரா, சென்ஜேம்ஸ், இளவாலை.
3. ஆன் அகஸ்ரின், 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
4. வெ. லெஸ்லின் டனி, மாதகல்.
5. யே. யோக்கிம் தாசன், எமில் நகர், மன்னார்.
6. சி. சிவகாந்தன், கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்.
7. நிர்மலா அந்தோனிப்பிள்ளை, மாதகல்.
8. எ. மேரி ஆன் கிறேஸ், மண்டைதீவு.
9. மரிய றீற்று, மண்டைதீவு.
10. இ. நிக்சன் ரஞ்சித்குமார், 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
11. ஞா. மொறின் றஞ்சினி, தி.கு க. மடம், யாழ்ப்பாணம்.

**பரிசு பெறும் நற்பேறுளர்:**
பவானி வடிவேல், அலவக்கரைவீதி, சம்மாந்துறை.

## மீண்டும் "இறையியற் கோலங்கள்"

கண்டித் தேசிய குருத்துவக்கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்ட 'இறையியற் கோலங்கள்' என்னும் சஞ்சிகை தவிர்க்க முடியாத காரணங்களாற் சில வருடங்களாக வெளிவரவில்லை. தற்போது யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி மாணவர்களின் துணையுடன் மீண்டும் இச் சஞ்சிகை வெளிவரவுள்ளது. தரம்மிக்க இறையியற் கருத்துக்கள், கட்டுரைகளை எமக்கு அனுப்பிவைக்குமாறு பணிவன்புடன் வேண்டுகின்றோம். இதன் முதற் பிரதி "மரியாளின் ஆண்டு" பற்றிய சிறப்பிதழாக ஆனி மாத இறுதியில் மலரும். ஒரு வருடத்திற்கு 4 சஞ்சிகைகள் வெளியிடப் படவுள்ளன. ஒரு பிரதியின் விலை ரூபா 5/= மட்டுமே.

முகவரி :- "இறையியற் கோலங்கள்"
புனித சவேரியார் குருமடம்,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

வாழ்வுதரும இறைவாக்கு

நம் சாமக் காவலர்கள்
யாவரும் குருடர்கள்,
போதுமென்ற மனமே
அவர்களுக்கு இல்லை;
மேய்ப்பர்களுக்குக் கூட
கொஞ்சமும் அறிவில்லை,
அனைவரும் தத்தம்போக்கில்
நெறிதவறிப் போயினர்.
இசை. 56: 10–11

இறைவாக்கு வாழ்வுதரும்

## "எம் கருத்துக்" குறள் தெளிவுரை

நீதியையும் நன்மையையும் விரும்பிப் பிறர்க்குப் பயன்பட வாழும் பெரியோரின் நல்ல பண்பை உலகத்தார் போற்றிக் கொண்டாடுவர்.




ஏப்ரல் 29
புனித சியென்னா கத்தரீனம்மாள் கன்னி
(1347—1380)

இத்தாலியில் சியென்னா நகரில் பெற்றோரின் 25 மக்களில் கடைசிக் குழந்தையாக 1347ம் ஆண்டு பிறந்தாள். 16 வயதில் டொமினிக்கன் 3வது சபையிற் சேர்ந்தாள். 28 வயதில் இவள் உணரக் கூடிய விதத்தில், ஆண்டவரின் திருக் காயங்கள் இவளது உடலில் பதிக்கப்பட்டிருந்தன. 35 வயதில் திருச்சபைக்காகத் தன் வாழ்வைக் காணிக்கையாக உயிர் விடுவதாகக் கூறி உரோமையிற் சாலமானள். நாமும் வாழ்நாளெல்லாம் திருச்சபைக்காக விடா முயற்சியுடன் செயற்படுவோமாக.

ஏப்ரல் 30
புனித 5ஆம் பத்திநாதர் பாப்பரசர்
(1504—1572)

இத்தாலியில் அலெஸ்சாந்திரியாவுக்கு அருகில் 1504ஆம் ஆண்டு பிறந்தார். புனித சாமிநாதர் சபையிற் சேர்ந்து குருப்பட்டம் பெற்றுப் படிப்படியாக கருதினலாக நியமனம் பெற்றார். 1566ஆம் ஆண்டில் பாப்பரசராக உயர்த்தப் பெற்றார். அன்றைய காலத்தில் திரிதெந்பொதுச் சங்கம் நிறைவேற்றிய தீர்மானங்களை ஊக்கத்தோடு நிறைவேற்றினார். திருவழிபாட்டை சீர்ப்படுத்தினார். பல எதிர்ப்புக்களைச் சந்தித்த போதும், இறைவனுடன் ஒன்றிப்பதன் மூலம் அவர் தம் பணியில் வெற்றி பெற்றார். நாமும் எமது அன்றாட எதிர்ப்புக்களின் மத்தியில் இறைவனுடன் ஒன்றிப்பதன் மூலம் வாழ முயலுவோமாக.

மே 2 புனித அத்தனாசியார் ஆயர் (295 - 373)

எகிப்தில் அலெக்சாந்திரியா நகரில் 295 ஆம் ஆண்டு பிறந்தார். இவரது காலத்தில் ஆசியப் பதிதத்தைப் பூண்டோடு அழிக்க இடையறாது போராடினார். கலப்படமற்ற விசுவாசத்திற்கு விளக்கமாக ஆயர் அநேக புத்தகங்கள் எழுதினார். பல இன்னல்கள் பட்டு 17ஆண்டுகள் பன்முறை நாடு கடத்தப்பட்டார். இறுதியாக அலெக்சாந்திரியா திரும்பி ஒரு சில ஆண்டுகளுள் அதாவது 373 ஆம் ஆண்டு மரித்தார். நாமும் தவறான விசுவாசத்தில் நிலைகொள்ளாமல், உறுதியான விசுவாசத்தில் வாழ முயலுவோமாக.

மே 3
புனித பிலிப்பும் யாகப்பரும்

புனித பிலிப்பு

கெனசரேத் ஏரிக்கரையிலுள்ள பெத்சாயிதா என்ற ஊரிற் பிறந்தார். முதலில் ஸ்நாபக அருளப்பரின் சீடராயிருந்து, பின்பு அப்போஸ்தலர்களில் ஒருவரானார். பரிசுத்த ஆவியின் வருகைக்குப் பின் நற்செய்தியைப் பரப்பும் பணியில் ஈடுபட்டார். இறுதியில் பிரிஜியா நாட்டில் சிலுவையில் அறைந்து கொல்லப்பட்டார்.

புனித யாகப்பர்

ஆண்டவரின் உறவினரான இவர், யூதாததேயுவின் சகோதரருமாவார் யெருசலேமின் முதல் ஆயர். ஏரோது அகிரிப்பா ஆட்சியில் கடுந்தவ வாழ்வை மேற்கொண்டார். இறுதியில் 62 ஆம் ஆண்டில் எருசலேம் ஆலய உச்சியிலிருந்து கீழே தள்ளப்பட்டுக் கொல்லப்பட்டார். நாமும் தேவ வார்த்தையைக் கேட்பவர்களாய் மாத்திரமிராமல் வாழ்விற் செயற்படுத்த முயலுவோமாக.

## மீட்பரின்···

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

அக்காலத்திலும் இடத்திலும் புலப்படக் கூடியதான வெளிப்படையான தொரு பண்புக் கூறும் அதற்கு உண்டு. ஏனெனில், திருச்சபை "உலகின் எல்லாப் பகுதிகளிலும் பரவுவதற்காகவே மனித வரலாற்றில் இடம் பெற்றிருக்கிறது. ஆனல் அதே வேளையில் அது "காலங்களையும் நாட்டு எல்லைகளையும் கடந்து நிற்கின்றது" (தி 9). ஆயினும் அதன் பயணத்தின் முக்கியமான சிறப்பம்சம் உள்ளார்ந்தமானதாகும். உயிர்த்த ஆண்டவரின் வல்லமையால் விசுவாசத்தால் மேற்கொள்ளப்படும் பயணம் கண்ணுக்குப் புலப்படாத துணையாளராக திருச்சபைக்கு அளிக்கப்பட்ட தூய ஆவியில் மேற்கொள்ளும் பயணமாகும் (அரு 14:26, 15:26, 16:7).

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி அந்தோனியாப்பிள்ளை சூசைப்பிள்ளை

மண்ணகம்: 10-09-1920
விண்ணகம்: 02-04-1988

ஆண்டவன் அழைப்பு
வந்தது எனக்கு
பூமியில் முடிந்தது என் கணக்கு

இவரின் ஆத்ம சாந்திக்காக 2-5-1988 திங்கட்கிழமை காலை 6-15 மணிக்கு யாழ். கார்மேல் மாதா ஆலயத்தில் இரங்கற் பலி ஒப்புக்கொடுக்கப் படும்.

இவரின் பிரிவால் துயருறும்
கணவன், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
இல. 12, அடப்பன்வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

## திருப்பாக் களஞ்சிய வரிசை

பழையதும் புதியதும் புனைந்து
புது மெருகுடன் வெளியாகிறது.

| | | |
|---|---|---|
| I. | "அன்னைக்கு இன்னிசை" | -ரூ 3. 50 |
| | இசைக் குறிப்பு | -ரூ 32. 00 |
| II. | திருப்பலி "பதிலுரைச் சங்கீதங்கள்" | -ரூ 4. 00 |
| | இசைக் குறிப்பு | -ரூ 30. 00 |

**எதிர்பாருங்கள்!!**

III. 'நம்மோடிறைவன்'
IV. பாஸ்கா மறை பொருள்.

**கிடைக்குமிடங்கள்:-**

"வார்த்தைப்பணியகம்,"
117, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

புனித சவேரியார் குருமடம்,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

செல்வி பிளசம் வேர்ஜினி
(பொன்மலர்)
ஆரோக்கியநாதர்



மண்ணிற்கு மலர்ந்தாய் 17-05-1964
விண்ணிற்கு விரைந்தாய் 8-04 1988

அன்பின் பிறப்பிடமே
அவனியின் ஆறுதலே
பொன்னின் மேனியளே
பொன்மலரே அம்மா நீ
உற்றார் உறவினர்கள்
உருண்டு உருண்டு கதறியழ
விண்ணில் மறைந்தே நீ
விமலனடி சேர்ந்தாயோ

மதுரமான யேசுவே! நீர் காட்டிய பாதையில் வாழ்ந்து உம்மிடம் ஓடிவந்த இவவின் ஆன்மாவுக்கு அமைதியும் ஆறுதலும் நிறைந்த உமது நித்திய ஒளியைக் கொடுத்தருளும்.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக, 9-5-1988 திங்கட்கிழமை மாரீசன் கூடல் புனித கயித்தார் ஆலயத்தில் காலை 6-00 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். இத்திருப்பலியில் பங்குபற்றி இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இவரின் பிரிவால் துயருறும்
பெற்றோர், சகோதரர்கள், சகோதரிகள்,
உறவினர்கள், நண்பர்கள்

பாதுகாவலன்
PATHUKAVALAN

## பெங்களூர் மறைவட்டத்தில் அமைதிக்காக வேண்டுதல்

இந்திய துறவறத்தோர் பேரவையின் பெங்களூர்கிளை பேராயர் அல்பொன்ஸ் மத்தியாஸ் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை வன்மையாகக் கண்டித்ததுடன், மறைவட்டத்தில் அமைதியும் ஒற்றுமையும் ஏற்படவேண்டும் என வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

இந்த அவையின் செயற்குழு மார்ச் 4ம்திகதி கூடியபொழுது மறைவட்டத்தில் ஏற்பட்டுள்ள மொழிப்பிரச்சினை பற்றிப் பேராயர் விடுத்துள்ள சுற்றறிக்கைக்கு தனது ஆதரவைத் தெரிவித்துள்ளது. மறைவட்டத்தில் அமைதியும் ஒற்றுமையும் வேண்டி மார்ச் 18ம் திகதியை ஒரு செப,உபவாச நாளாக அனுசரிக்க வேண்டுமென்றும் மறைவட்டத்தில் கத்தோலிக்கர் மத்தியில் அமைதியை நிலைநாட்டுவதில் பேராயர் நியமித்துள்ள குழுவுடன் துறவிகள் ஒன்றித்து உழைக்க வேண்டுமென்றும் பேரவையின் செயலாளருக்கு எழுதப்பட்ட ஒரு கடிதத்தில் கேட்கப்பட்டுள்ளது.

பேராயர் தமது சுற்றிக்கையில் தமது மொழிக்கொள்கையை வரையறுத்துக் கூறியிருக்கிறார். அதில் வழிபாட்டு மொழி ஒவ்வொரு பங்கின் மொழி நிலையைப் பொறுத்துள்ளது எனக் கூறப்பட்டுள்ளது. ஆனால்சிலகன்னட தீவிரவாதிகள் பேராயர் சென்ற காரைத் தாக்கிச் சேதப்படுத்தி சாரதியையும் காயப்படுத்தினர் என்பது வாசகர் அறிந்ததே. பேராயர் காயமின்றித் தப்பினார்.

## இரகசியத் திருச்சபையை ஆதரிக்கவேண்டாம்

சீனாவில் நியமிக்கப்பட்ட ஷாங்காய் ஆயர் அலோசியஸ் ஜின் லுக்சியன் "இரகசியமாகத் திருநிலைப்படுத்தப்பட்ட" குருக்களின் சட்டவிரோத நடவடிக்கைகளை ஆதரிக்கவேண்டாமென வத்திக்கானை வற்புறுத்தியிருக்கின்றார் என ஹொங்கொங் பத்திரிகையொன்று குறிப்பிட்டுள்ளது.

ஏப்ரல் 5ம் திகதி வெளிவந்த இச்செய்தி சீனாவில் பத்துக்கு மேற்பட்ட ஆயர்களும் சுமார் 200 குருக்களும் இரகசியநடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாக ஆயர் ஜின் மதிப்பிட்டுள்ளதாகவும் கூறுகிறது. இவர்கள் போதிய இறையியல் அறிவு அற்றவர்களென்றும், தவறான கொள்கைகளுக்கு இரையாகலாம் என்றும் கருதும் ஆயர் ஜின் தொடர்ந்தும் வத்திக்கான் இவர்களுக்கு ஆதரவளிப்பது சீன-வத்திக்கான் உறவு ஏற்படுவதற்கு இடையூறாக இருக்கும் என்றும் கூறியுள்ளாராம்.

சீனா தனது ஆயர்களைத் தானே நியமிக்கிறது. வத்திக்கான்-சீன பேச்சுவார்த்தைகளின் மூலம் இப்பிரச்சினை தீர்க்கப்படலாம் என அவர் கருதுகிறார். தாய்வானோடு வத்திக்கான் இராஜதந்திர உறவுகளை வைத்திருப்பதும், செஞ்சீனா அங்கீகரிக்காதிருப்பதும் உறவுகளுக்கு இடையூறாக இருக்கின்றன என்று கருதும் ஆயர் ஜின் இவற்றைக் குறித்துக் கேள்விகள் எழுப்பியுள்ளார்.

ஆனால் எதிர்காலத்தில் சீன-வத்திக்கான் உறவுகள் பற்றி நம்பிக்கை தெரிவித்த அவர், இந்த உறவு சீனாவிலுள்ள திருச்சபைக்கும் அரசுக்கும் நன்மை பயக்கும் என்றார்.

ஆயர் ஜின் கடந்த மார்ச் மாதத்தில் ஷாங்காய் ஆயராக நியமிக்கப்பட்டார்.

## கத். பல்கலைக்கழகங்களின் ஒன்றியம்

கத்தோலிக்க பல்கலைக் கழகங்களின் சர்வதேச ஒன்றியம் ஆடி 31 - ஆவணி 5 இல் ஜகார்த்தா நகரில் கூடும்போது 36 நாடுகளைச் சேர்ந்த 170 பிரதிநிதிகள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. ''பல பண்பாடுகளுள்ள சமுதாயத்தில் கத்தோலிக்க பல்கலைக்கழகத்தின் பங்கு'' என்பதே இக்கூட்டத்தின் மையக் கருத்தாக இருக்கும் என ஆத்மஜயா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஹிமவான் ஜஜேந்திரா தெரிவித்துள்ளார். இந்தோனேசியாவிலுள்ள பத்து கத்தோலிக்க பல்கலைக்கழகங்களில் ஆத்மஜயாவே சிறப்பானது. கத்தோலிக்க பல்கலைக்கழகங்களில் கத்தோலிக்க சமயம் கற்பிக்கப்படுகிறது. ஆனால் மதம் மாற்றும் நோக்கத்துடனல்ல, நாட்டின் அறிவு வளத்தைப் பெருக்குவதில் அரசாங்கத்துக்குப் போட்டியாக அல்லாது துணையாகவே கத்தோலிக்க பல்கலைக் கழகங்கள் கருதப்படவேண்டும் என ஒன்றியத்தின் தலைவர் கூறினார்.

## கத்தோலிக்க பத்திரிகை வெளியீட்டாளர் கூட்டம்

தெற்காசிய கத்தோலிக்க பத்திரிகையாளர் சங்கத்தின் பொதுக்கூட்டமொன்று ஆவணி மாதத்தில் நேபாளத்திலுள்ள கட்மாண்டுவில், நடைபெறவுள்ளது. சகல அங்கத்தவர்களும் இக்கூட்டத்தில் கலந்துகொள்வார்களென எதிர்பார்க்கப்படுகிறது. UCIP தலைவரான ஜான் மாறி புருனோவும், பொதுச்செயலாளரான பிதா புருனோ ஹொல்ட்ஸூம் இதில் கலந்துகொள்வார்கள். தெற்காசிய கத்தோலிக்க வெளியீட்டாளர் சங்கத்தில் இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், பங்களதேஷ் ஆகிய நாடுகளிலுள்ள கத்தோலிக்க வெளியீட்டாளர் சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்துகொள்வார்கள்.

## ஆசியாவில் குருமட ஆசிரியர் பற்றுக்குறை

பதினான்கு ஆசிய நாடுகளைச் சேர்ந்த குருமட அதிபர்கள் கடந்த மார்ச் முதலாம் திகதி பிலிப்பைன்ஸில் ஒன்று கூடிய போது, குருமட ஆசிரியர் பற்றுக்குறையைச் சுட்டிக்காட்டி, தகுதிவாய்ந்த ஆசிரியர்களும் ஆன்ம உருவாக்க இயக்குனர்களும் உருவாக ஆயர்கள் துணைபுரிய வேண்டுமெனக் கேட்டுள்ளனர்.

அங்கு சமூகமளித்த 43 குருமட அதிபர்களும் ஆயர்களிடம் பின்வரும் வேண்டுகோள்களை விடுத்தனர்.

-குருமட ஆன்ம இயக்குநர்களுக்கு தீவிர உருவாக்கற் திட்டமொன்று வகுத்து, குருமடங்களிற் பணிபுரிய போதிய ஆட்களை நியமிப்பது.

-குருமட ஆசிரியர்களை விருத்திசெய்வதற்கு மறைமாவட்டத்தில் முன்னிடம் அளிப்பது.

சமூகவியல், மறைகளுக்கிடையிலான உரையாடல், பண்பாட்டு மயமாக்கல் போன்ற துறைகளிற் சிறந்த தகுதிவாய்ந்த ஆசிரியர்களை ஒன்று சேர்த்து அவர்கள் ஆசியாவின் பல்வேறு பாகங்களிலும் மாறி மாறிப் பணிபுரிய வழிசெய்வது.

6000 குருமாணவர் கற்கும் பிலிப்பைன்ஸ் தீவுகளில் 153 முழுநேர ஆசிரியர்களே உள்ளனர். குருக்களில் அறிஞர் பலர் இருப்பினும் அவர்கள் பங்குத் தளத்திலும் வேறு துறைகளிலும் ஈடுபடவே விரும்புகின்றனர். அத்துடன் தொடர்ந்து கற்க விரும்புவோர் தொகையும் குறைவாகவே உள்ளது.

## பிரச்சனைகள் தீர்ப்பதுபற்றிய கலந்துரையாடல்

கல்கத்தா மறைமாவட்டத்தில் ''பிரச்சினைகளைத் தீர்ப்பதும் படைப்பாற்றலும்'' பற்றிய கலந்துரையாடலொன்று மார்ச் 8ஆம் திகதி ஆயர் இல்லத்தில் நடைபெற்றது, குருக்கள் கன்னியர், துறவிகள் உட்பட 52 பேர் இதில் பங்குபற்றினர். இந்த அமர்வுகளை திரு. பிரான்சிஸ் லொபோ நடத்திவைத்தார்.

எல்லாப் பெரும் பிரச்சினைகளும் சிறிய பாகங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றும் தனித்தனியாக அணுகப்படவேண்டும் என்பதே அவரது உரையின் மையக் கருத்தாக இருந்தது. எந்தப் பிரச்சினையைத் தீர்க்கும்போதும் மதிப்பீட்டுச் செயலாட்சியே மனதிற்கொள்ளவேண்டிய முக்கிய விடயம் என்பதை அவர் வற்புறுத்தினார்.

## எதிர்காலத்திற்கு வழி சமயக்கல்வியே

''பஞ்சசீலக் கொள்கையில் கூறப்பட்டபடியான நீதியும் வாழ்வுவளமும் கொண்ட ஒரு சமுதாயத்தை உருவாக்குவதற்கு சமயக்கல்வி அத்தியாவசியமாக இருப்பதால் அது உறுதிப்படுத்தப்படவேண்டும்'' என இந்தோனேசிய ஜனாதிபதி சுஹாட்டோ கூறியுள்ளார்.

முகமதுநபி பரகதியடைந்த தினத்தன்று இஸ்திக்வால் பள்ளிவாசலில் நடைபெற்ற விழாவொன்றில் பேசுகையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார் ''நாட்டின் சகல அபிவிருத்தித் திட்டங்களும் அடுத்த தலைமுறையினருக்கு இப்போதிருப்பதைவிட உயர்ந்த வாழ்க்கைத் தரத்தை அளிப்பதையே குறிக்கோளாகக் கொண்டுள்ளன. ஆனால் அபிவிருத்தியின் விளைவாக ஏற்படும் மாற்றங்கள், சமூககலாசார மதிப்பீடுகளில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தலாம். இப்பிரச்சினைகளை நாம் தவிர்க்க முடியாது. ஆனால் நாம் அவற்றை மேற்கொள்ள வேண்டும். ஆகவே கல்வி சிறுவரின் ஒழுக்கத்தைக் கட்டியெழுப்புவதாக அமையவேண்டும். இதில் சமயக்கல்வி முக்கிய பங்கு வகிக்கிறது'' என அவர் மேலும் கூறினார்.

## பிதா சவாரா...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாநில ஆளுநர் திரு. பி. இராமச்சந்திரன், திருவனந்தபுரம் பேராயர் பெனடிக்ற் கிறகோர்யோஸ், யூனியன் அமைச்சர்களான திரு. எம். எம். ஜேக்கப், திரு. எஸ். கிருஷ்ணகுமார், முன்னாள் முதலமைச்சர் திரு. கே. கருணாகரன், கார்மேல் மாதாசபை, மாசில்லா மாதாவின் கார்மேல்சபை ஆகியவற்றின் சிரேஷ்டர்கள் ஆகியோர் இவ்வைபவத்திற் கலந்து கொண்டனர்.

இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1988-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## திருச்சபையின் ஆதரவில் புதிய பத்திரிகை

கடந்த ஏப்ரல் 12-22ம் திகதிகளில் இந்திய கத்தோலிக்க ஆயர் பேரவையின் பொதுக்கூட்டம் கேரளத்தில் நடைபெற்றபோது திருச்சபையின் ஆதரவில் ஒரு புதினப் பத்திரிகையைத் தேசிய ரீதியில் நடத்துவது பற்றியும் ஆலோசிக்கப்பட்டது.

இந்திய ஆயர் பேரவையில் 119 மறைமாவட்டங்களை நிர்வகிக்கும் 125 ஆயர்கள் உள்ளனர். பத்திரிகையைப் பற்றித் திட்டமிடும் வேலை ஆயர் பேரவையின் தேசிய ஆலோசனைச் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை ஏனைய உலகியல் பத்திரிகைகளைப் போலவே தொழில்ரீதியாக நடத்தப்படும். பத்திரிகையை நடத்துவதில் ஆயர்கள் முக்கிய பொறுப்பை வகிக்கமாட்டார்கள்.

நாட்டின் பிரபலமான மலையாளத்தினசரியான ''மலையாள மனோரமா'' அண்மையில் அதன் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடியது. 550,000 பிரதிகளை விநியோகிக்கும் இத்தினசரி ஒரு கிறிஸ்தவ குழுவினால் நடத்தப்படுகிறது. இது ஒரு ஆங்கில வார வெளியீட்டையும் பிரசுரிக்கிறது.

கார்மேல் சபையினரால் நடத்தப்படும் கத்தோலிக்க தீபிகா என்னும் தினசரிசென்ற ஆண்டு தன் நூற்றாண்டு நிறைவைக் கொண்டாடியது.

உன்னை மீட்கவும் விடுவிக்கவும் நாம் உன்னோடிருக்கிறோம் என்கிறார் ஆண்டவர்